REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 8 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வருட. 90 இல. 185 | Monday 08,August, 2022 | 12பக்கங்கள் | 40/-

**இலங்கைக்கு மனிதாபிமான உதவிகள்;**

## இந்திய மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ்

நாட்டிற்கு வழங்கிய மனிதாபிமான உதவிகளுக்காக புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய மக்களுக்கு தமது நன்றியை தெரிவித்துள்ளார். 04

## சர்வகட்சி அரசு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் வெற்றி

**விமல தேரருடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில்**

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ராமான்ய நிக்காயாவின் மகா நாயக்கர் மகுலேவே விமல தேரரை சந்தித்த போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி தவிர்ந்த ஏனைய 04



## சர்வ கட்சி அரசுக்கு பதிலாக சர்வகட்சி ஆட்சிமுறை

**SJB உடனான சந்திப்பில் ஜனாதிபதி முன்மொழிவு**

சர்வகட்சி அரசாங்கம் என்ற வரையறைக்கு இணக்கம் காண முடியாத பட்சத்தில் சர்வகட்சி நிர்வாக ஆட்சிமுறையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார். இது தொடர்பில் 04



## இலங்கைக்கு ஒருபோதும் தீங்கிழைக்க மாட்டோம்

**சீன வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியிடம் உறுதி**

இலங்கையின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்த செயலும் மேற்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் நேர்மையான மற்றும் நம்பகமான நண்பராக இருப்பதாக சீனா உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. சீன அரசவை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான 04



**12.5 Kg எடையுள்ள சிலிண்டரின் விலையில் மாற்றம்;**

# சமையல் எரிவாயுவின் விலை இன்று நள்ளிரவு முதல் குறையும்

**200 முதல் 300 ரூபாவிற்கு இடைப்பட்ட தொகையினால் குறைவடையும்**



அமைச்சரவையில் சமர்ப்பித்து
அனுமதி கிடைத்ததும் விலை குறைப்பு
தொடர்பான உத்தியோகபூர்வ
அறிவிப்பு வெளியிடப்படும்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

சமையல் எரிவாயுவின் விலைகள் இன்று நள்ளிரவு முதல் 200 முதல் 300 ரூபாவிற்கு இடைப்பட்ட தொகையினால் குறைவடையும் என லிற்றோ கேஸ் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

12. 5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை இவ்வாறு குறைவடையலாம் என்றும் ஏனைய சிலிண்டர் விலைகளும் அதற்கேற்ப மாறும் எனவும் அந்த வட்டாரங்கள் 04



வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் 35 ஆவது வருஷாபிஷேகத்தையொட்டி நேற்று வெள்ளவத்தை இந்து சமுத்திர தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவம் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.
படம்: அஷ்ரப் ஏ. சமத்



## மின்சார கட்டணத்தில் திருத்தம்: நாளை அறிவிக்கப்படவுள்ளது 03

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகை

**அமைச்சு பொறுப்புகளை ஏற்கோம்;**

## நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு

**எதிர்க்கட்சித்தலைவர் சஜித் தெரிவிப்பு**



அமைச்சு பொறுப்புக்களை ஏற்காது நாட்டை கட்டியெழுப்பும் பொது வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தெரணியகல பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் 04

**பொருட்கள் விலை குறைப்பின் எதிரொலி;**

## உணவுப் பொதி, தேநீர் இன்று முதல் விலை குறைப்பு

உணவுப் பொதியினதும், தேநீர் கோப்பையினதும் விலைகளை இன்று முதல் குறைக்க உள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட உள்ளமையால் குறித்த தீர்மானம் 04



## திங்கள், செவ்வாய், புதன் மட்டுமே பாடசாலை

**வடக்கில் மட்டும் 05 நாட்கள் இடம்பெறும்**

சகல அரச மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளில் இந்த வாரம் மூன்று நாட்களுக்கு மாத்திரம் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி, இன்று திங்கள், 04



**அமைச்சுப் பதவி பகிர்வை விட்டுவிட்டு**

## பொதுவான வேலைத்திட்டம் முன்வைப்பின் நாம் ஆதரவு

**ஜனாதிபதி ரணிலிடம் ரிஷாத் MP தெரிவிப்பு!**

பதவிகளுக்கென கட்சிகளை ஒன்று சேர்க்காமல், நாட்டுக்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும், அந்த வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவு கிடைக்கும் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக 04



**9 ம் திகதி போராட்டம்:**

## சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட கருத்து

**எமக்கு தொடர்பில்லை SJB**

பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 9 ஆம் திகதி போராட்டம் தொடர்பில் வெளியிட்ட கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்து, அதற்கும் எமது கட்சிக்கும் எந்த தொடர்புமில்லை. அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள 04




## குரங்கு அம்மை தொடர்பில் இன்று முதல் பரிசோதனைகள்

**கொழும்பு, கண்டியில் மத்திய நிலையங்கள்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாட்டில் குரங்கு அம்மை நோயாளர்கள் உள்ளனரா என்பதை இனங்காணும் வகையில் இன்று முதல் விசேட பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அது தொடர்பில் நேற்று சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அன்வர் 04



## கொழும்பில் வேகமாக பரவிவரும் கொரோனா

**டொக்டர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை**

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும், கொரோனா உப திரிபு ஒன்று வேகமாக பரவுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின், ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறைப் பிரிவு தெரிவித்துள்ளது.

24 கொரோனா நோயாளர்களின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில், 20 மாதிரிகளில், இந்தப் புதிய உப திரிபு கண்டறியப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் 04



## இராணுவ தளபதியை சந்தித்து உரையாடிய ஜீவன் தியாகராஜா

**வடமாகாண விபரங்களை விபரித்தார்**



வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேவை இராணுவ தலைமையகத்தில் சந்தித்துள்ளார். இதன்போது வடமாகாண அக்கறை மற்றும் 04



## அரச வங்கியில் 68.3 மில். ரூபா மோசடி செய்த பெண் அதிரடி கைது 03

ஓய்வுபெற்ற பின்னர் CID விசாரணையில் சிக்கினார்



## 2 மாதங்களில் 21 சூட்டு சம்பவங்கள் உயிரிழப்பு 23 ஆக பதிவானது 03

## 'புளொட்' அமைப்பின் தலைவராக சித்தார்த்தன்

**மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்**



தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் 'புளொட்' தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதன் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச்சபை கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் 04

## இலங்கையில் விரைவில் முன்னேற்றம் ஏற்படும்

**ஜப்பானிய பிரதமர் ரணிலுக்கு வாழ்த்து**



இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் விரைவான முன்னேற்றம் ஏற்படும் என தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. பிரதமர் ஃபுமியோ கிஷிடா இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார். 04

## அவசர கால சட்ட விதிகளில் திருத்தம்

**விசேட வர்த்தமானி வெளியானது**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த ஜூலை 18ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதியினால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் ஊடாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 'தேடல் 04

**TOP 25 புலம்பெயர்ந்தோர் விருது;**

## கனடாவில் இலங்கை தமிழருக்கு அங்கீகாரம்



2022ஆம் ஆண்டுக்கான Top 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பட்டியலில் இலங்கையர் ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

Top 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருது என்பது, கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்து 04

**சிறிது முடக்கம் பெற்றிருந்த SLPP**

## கட்சி பணிகளை ஆரம்பித்தார் நாமல்



அண்மைக் காலமாக முடக்கம் பெற்றிருந்த கட்சி சீரமைப்பு, கலந்துரையாடல் பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தீவிரமாக ஆரம்பித்துள்ளார். அவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொறியியலாளர் சங்க பிரதிநிதிகளுக்கும் 04

## சவால்களை வெற்றி கொள்ள வாழ்த்து

**ஜனாதிபதிக்கு ஐ.நா செயலாளர் கடிதம்**



புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். 04

# கடற்றொழிலாளருக்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

ஓரிரு வாரங்களுக்குள் கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாமல் போகுமானால், கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் கரையோர பகுதிகளான கற்பிட்டி, உடப்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானாந்த நேற்று முன்தினம் (06) கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.



கற்பிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் , துறைமுகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

இதன்போது, துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் கண்காணிப்பு கமெராக்களை பொருத்துதல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பாவனையற்ற படகுகளை அகற்றுதல் உட்பட பல்வேறு விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அவை தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கற்பிட்டி , உடப்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீனவர்களைப் பொருத்த அளவில் பெரும் பிரச்சினையாகவே காணப்படுகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம்.

இதுதொடர்பில் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளேன். விரைவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் அனைத்து மீனவர்களுக்கும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க கடற்தொழில் அமைச்சர் என்ற வகையில் தனிப்பட்ட வகையில் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறேன். முடியுமானளவு குறைந்த விலையில் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இதேவேளை, இந்திய மீனவர்களின் , ரோலர் மீன்பிடிப் படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பிற்குள் வருகின்றன. இந்தப் பிரச்சினை மிக நீண்ட காலமாக காணப்படுகிறது. திருடராய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று சொல்வார்கள். அதுபோலவே இந்த விடயத்தில் இந்தியாவும் புரிந்து நடக்க வேண்டும். மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு துணை நிற்பது மாத்திரமன்றி, அவற்றை நிறைவேற்றுவதற்கும் முன்னின்று செயற்படுவேன் என்றார்.

## நகர்வலம்



வடகொழும்பு பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களுக்கு சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவர் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ தலைமையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கொழும்பு13, புதுச்செட்டித்தெரு வியாகுல மாதா கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெற்றது. IDM Nations Campus International கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி. ஜனகனின் ஏற்பாட்டில் மூவின மக்களுக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்படுவதை காணலாம். (படம்: எம். நசார்)

## துப்பாக்கி சூட்டில் குடும்பஸ்தர் பலி

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

லுனுகம்வெஹெரை படவ்கம பிரதேச வீடொன்றில் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் இரவு சாப்பாட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்த நபர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக லுனுகம்வெஹெரை பொலிஸார் (05) தெரிவித்தனர்.

லுனுகம்வெஹெரை பிரதேச செயலகத்தில் பலநோக்கு பிரிவில் கடமைபுரியும் ஏ. டி. திலின பிரசாத் எனும் (35 வயது) இரண்டு குழந்தைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டவரின் மைத்துனன் மற்றும் அவரது தந்தை இந்த கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக லுனுகம்வெஹெரை பொலிஸார் தெரிவித்தனர்.

## அற்றைத்திங்கள் நிகழ்வு

தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும். தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு எதிர்வரும் 11ம் திகதி வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கொழும்புத் தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தில்

## 78,000 மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு



திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தில் நுகர்வோர் தேவையை கருதியும் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் மீன் குஞ்சுகள் அண்மையில் விடப்பட்டுள்ளன.

நீர் வாழ் உயிரின அதிகாரிகளால் அண்மையில் இக் குளத்தில் சுமார் 78 ஆயிரம் "திலாப்பியா" இன மீன் குஞ்சுகள் விடப்பட்டதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மீன் குஞ்சுகள் விடும் இந் நிகழ்வில் மீன்பிடி உத்தியோகத்தர்கள் உட்பட நன்னீர் மீனவ சங்க தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் மீனவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இக் குளத்தில் கெட்லோ, கோல்டன், ரூஹு போன்ற பெரிய இன நன்னீர் மீன் குஞ்சுகள் அடிக்கடி விடப்படுவதோடு, இப் பிரதேசங்களில் இவ்வாறான பெரிய இன மீன் கிலோ 600 தொடக்கம் 700 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் மீனுக்கான தட்டுப்பாடும் நிலவுகின்றது.

## 200 லீற்றர் டீசல், 40 லீற்றர் பெற்றோல்; அதிக விலையில் விற்பனை செய்த வியாபாரி ஒருவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மெதிரிகிரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியசேனபுர பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் அதிக விலைக்கு எரிபொருட்களை விற்பனை செய்து வந்த நிலையில் 200 லீற்றர் டீசல் மற்றும் 40 லீற்றர் பெற்றோலுடனும் உரிமையாளரை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர் 62 வயதான வியாபாரியாவர். சந்தேக நபர் அதிக விலையில் எரிபொருள் விற்பனை செய்வதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய உலவாளி ஒருவரை பயன்படுத்தி எரிபொருள் பெற்றபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரின் வியாபார நிலையத்தை சோதனையிட்ட போது ஐந்து கலன்களில் இருந்து 200 லீற்றர் டீசல் இரண்டு கலன்களில் இருந்து 40 லீற்றர் பெற்றோல் என்பனவைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கிராந்துறுகோட்டை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

மெதிரிகிரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யு .ஏ.எல். விதானகே தலைமையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கலாநிதி சொலமன் அலெக்சாண்டரை நிறுவனராக கொண்ட கிளேரா கிறிஸ்தவ சர்வதேச பாடசாலை கடந்த சனியன்று கொழும்பு15. சென். ஜெம்ஸ் வீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் நிறுவனர் உரையாற்றுவதையும் சிறப்பதிதியாக கலந்து கொண்ட புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதாமேத்தா உரையாற்றுவதையும் மாணவர்களுக்கு அவர் பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கிழக்கின் குரல்

## சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய வாய்ப்பை முஸ்லிம் தலைமைகள் தட்டிக்கழிக்க கூடாது

(கல்முனை விசேட நிருபர்)

சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகள் இணைந்து கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய நல்லதொரு வாய்ப்பை முஸ்லிம் தலைமைகள தவறவிடக் கூடாதெனவும் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயத்தை வலியுறுத்தி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதை இலக்காகக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார். இச்சந்தர்ப்பத்தை முஸ்லிம் தலைமைகள் சரியாக பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, விக்னேஸ்வரன் அணி போன்றவை தமது சமூகம் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றுக்கான உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு தமிழ் தலைமைகள் தயாராகி வருகின்றன. இத் தலைமைகளின் முன்னுதாரணத்தை முஸ்லிம் தலைமைகளும் பின்பற்றுவது அவசியம்.

தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல். எம்.அதாஉல்லா, ஜனாதிபதியுடன் பேச்சுநடாத்தியதைப் போன்று,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ஜனாதிபதியுடன் பேச்சுநடாத்தியதாக தெரியவில்லை.

இவ்விரு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிப்பதால், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தீர்மானத்துடன் இணங்கிப்போகும் நிலைப்பாட்டுடனேயே தொடர்ந்தும் இருப்பதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் சமூகம் சார்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாகப் பேசுவதற்கு இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் ஆர்வம் காட்டவில்லை. இது, முஸ்லிம் சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் உள்ள சவால்கள் மற்றும்பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உடன்பாடு கண்ட பின்னரே சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து பணியாற்ற சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்றும் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

## காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு கதிரைகள் அன்பளிப்பு

( புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

கட்டாரில் பணிபுரியும் காத்தான்குடி சமூகத்தின் (கே,சி,கிவ்) ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு (தேசிய பாடசாலை) கதிரைகள் அன்பளிப்புச்செய்யப்பட்டது. இந்நிகழ்வு அண்மையில் (31) பாடசாலை பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எம். சி. எம். ஏ. சத்தார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கட்டாரில் பணிபுரியும் சகோதரர்கள், பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் பொறியியலாளர் எம். எம். பழுலுல் ஹக், செயலாளர் ரிபாய் கலீல், உப அதிபர் நிஹால், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் செயலாளர் கலந்தர் லெவ்வை, பழைய மாணவர் சங்க உறுப்பினர் எம்.எம்.எம். சுபியான் மற்றும் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை பரீட் மண்டபத்தின் முக்கிய தேவையாகக் காணப்பட்ட கதிரைகளே இதன் போது வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## மட்டக்களப்பில் பாரம்பரிய நெல் அறுவடை விழா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

பாரம்பரிய விதை நெல் உற்பத்தி அறுவடை விழா,கடந்த வியாழக்கிழமை (04) மாலை இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராசாவின் தலைமையில் இவ்வறுவடை விழா நடைபெற்றது.

இதில் மதிப்பீட்டு நிகழ்வும் இடம்பெற்றது. பாரம்பரிய நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில், இவ்வாறான அறுவடை விழாக்கள் இடம்பெறுகின்றன.



பாரம்பரிய விதை நெல் உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநரின் நிதி உதவியில், திரசார குருஷி சங்ஸ்குருத்திய திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 187.5 ஏக்கரில் செய்கைபண்ணப்பட் வயலிலே இவ்விழா நடைபெற்றது.

இதில், மட்டக்களப்பு மத்தி வலயத்தின் கரவட்டி விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு 10 ஏக்கருக்கென, பச்சைப்பெருமாள் எனும் பாரம்பரிய இனமும், மேலும் 20 ஏக்கருக்கு மடத்தவாலு என்னும் நெல்லினமும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்த வயல்களின் அறுவடை விழாக்களே அண்மையில் நடைபெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மத்தி பிரதி விவசாயப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, பாடவிதான உத்தியோகஸ்த்தர்களான சி.எல். செந்தீபன், என்.லெட்சுமணன், மற்றும் விவசாயப் போதனாசிரியர்களான ரி.கோசலரூபன், என்.விவேகானந்தராசா, எம்.சிபான், மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## அம்பாறை மத்திய முகாமில் நூறுநாள் உரிமை போராட்டம்

( காரைதீவு குறூப் நிருபர் )



வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாள் உரிமப் போராட்டத்தின் ஓரங்கமாக நேற்று (07) ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மத்திய முகாமில் பாரிய போராட்டம் நடாத்தப்பட்டது.

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனியில் இப்போராட்டம் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நான்காம் கிராமம் ஸ்ரீ பாமடி சித்தி விநாயகர் ஆலய மூன்றிலிருந்து, நடைபவனியாக வருகை தந்த மக்கள் பல கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை, நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அதிகார பரவலாக்கம், ஜனநாயக உரிமையின் அம்சம்,

13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கலுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது,தமிழ் தலைமைத்துவங்களோடு செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகள் எட்டாக்கனியாகவே உள்ளது,

இந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கும் நிகழ்வாகவே இந்த நூறுநாள் போராட்டம் இடம்பெறுகிறது. எனறும் இவர்கள் கோஷமிட்டனர்.

சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களைச் சேர்ந்தவர்கள், விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் இதில் கலந்து சிறப்பித்தனர்.

# மின்சார கட்டணத்தில் திருத்தம்: நாளை அறிவிக்கப்படவுள்ளது

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சார கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான அறிவிப்பு நாளை செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை, மின்கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடலொன்று இன்று நடைபெற உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முக்கிய கலந்துரையாடலில் மின் சக்தி அமைச்சு, மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, திறைசேரி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

04

சர்ச்சைக்குரிய சீனக் கப்பல்;

# வருகையை ஒத்திவைக்க சீனாவிடம் இலங்கை கோரல்

சர்ச்சைக்குரிய 'யுவான் வாங் 5' என்ற சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு சீனாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையில் இது தொடர்பில் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் நோக்கில் வெளிவிவகார அமைச்சு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கப்பல் எதிர்வரும் 11 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைய திட்டமிட்டுள்ளது. 17 ஆம் திகதி வரை அங்கு நங்கூரமிட இருந்தது. கப்பலின் இலங்கை விஜயம் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள இந்தியா, உயர் தொழில்நுட்ப சீனக் கப்பலின் வருகையானது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட தேவைகளுக்காகவே ஹம்பாந்தோட்டைக்கு வரவிருந்தது. இந்தக் கப்பல் ஒரு உளவுக் கப்பலாகக் கருதப்படுகிறது, மேலும் அது ஹம்பாந்தோட்டைக்கு வருவது

04

# இலங்கையில் மேலும் ஐவர் கொவிட்டுக்கு மரணம்

இலங்கையில் மேலும் 5 கோவிட் தொடர்பான மரணங்கள் பதிவாகியுள்ளன.

இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த ஐந்து பேரில் 3 ஆண்களும் 2 பெண்களும் அடங்குவர். உயிரிழந்த ஐந்து பேரும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, நாட்டில் பதிவான மொத்த கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,583 ஆகும்.

இதேவேளை, இலங்கையில் மொத்தமாக அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 666,580 ஆகும்.

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எரிக் காலமானார்



கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் எரிக் சந்திரசேன நேற்று முன்தினம் (06) காலமானார். இவர் இரண்டு தசாப்த காலமாக கொழும்பு கிழக்கு தேர்தல் பிரிவுக்குட்பட்ட கொள்ளுப்பிட்டி பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி நகர சபை உறுப்பினராக இருந்து பணியாற்றினார்.

இறக்கும்போது அவருக்கு வயது 75 ஆகும். அவர் ஒரு புதல்வியின் தந்தையாவார்.

கொழும்பு நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் வறியவர்களுக்கு தர்மப்பணம் பெற்றுக் கொடுக்க அப்பிரச்சினையை அதற்குரிய குழுவினரிடம் எடுத்துச் சென்று தீர்வினையும் பெற்றுக் கொடுத்தார். அத்துடன் அப்பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொடுத்த வராவார்.

எரிக் சந்திரசேனவின் உடல் கொழுப்பிட்டி நெல்சன் ஒழுங்கையில் இலக்கம் 30 என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (8) பிற்பகல் 1.00 மணிக்கு கொழும்பு நகர சபை மண்டபத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4:30 மணியளவில் பொரளை கனத்தையில் தகனம் செய்யப்படும்.

**மத்திய கொழும்பு குறூப் நிருபர் ஆரிய ரத்ன கணேகொட**

# அரச வங்கியில் 68.3 மில்லியன் ரூபா மோசடி செய்த பெண் அதிரடி கைது

## ஓய்வுபெற்ற பின்னர் CID விசாரணையில் சிக்கினார்



அரச வங்கியொன்றில் இருந்து 68.3 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த ஓய்வு பெற்ற பெண் வங்கி அதிகாரியொருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடவத்தை அரச வங்கியில் 48 போலி கடன் ஆவணங்களை சமர்ப்பித்து 68,340,000 ரூபா நிதியை இவ்வாறு மோசடி செய்துகொண்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உயிரிழந்துள்ள நிலையில், குறித்த மோசடிக்கு உதவியதற்காக தற்போது கைதான பெண், சம்பந்தப்பட்ட வங்கியின் கடன் பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கடவத்தை பிரதேசத்தைச்

04



கொழும்பு13, மசங்கஸ்வீதி பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு கடந்த சனியன்று 3500 ரூபா பெறுமதியான நிவராணப் பொருட்களைப் பெறுவதற்கான பண வவுச்சர்கள் கொழும்பு பிரதி மேயர் எம்.ஐ.எம் இக்பால் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டபோது.

# Dell Partner Business Conference இல் ஆசியாவின் வளர்ந்து வரும் நிறுவனங்களில் மகத்தான வெற்றியைப் பதிவு செய்துள்ள Softlogic Information Technologies

நிறுவனங்களுக்கான இலங்கையின் முன்னணி தீர்வு வழங்குநரான Softlogic Information Technologies (Pvt) Ltd (Softlogic IT), சமீபத்தில் Dell Technologies FY23 Partner Business Conference Asia Emerging Markets விருது வழங்கும் விழாவில் இரண்டு பெறுமதியான விருதுகளை வென்றுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான 'Tier 1 Partner of the Year – Sri Lanka and Maldives' மற்றும் 'Asia Emerging Markets Solution Provider of the Year Client Solutions Group' ஆகிய விருதுகளையே அது வென்றுள்ளது. இவ்விருதுகள் யாவும் ஒரு முழுமையான ஆய்வுச் செயன்முறைகளின் பின்னரே Softlogic IT இற்கு வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மற்றும் பிராந்திய ரீதியில் DELL உடனான சிறந்த பங்குதாரர்களை தெரிவு செய்வதற்கான காரணிகளான சிறந்த வாடிக்கையாளர் சேவை, புத்தாக்கமான சந்தை உத்திகள், வருடாந்த ரீதியிலான வணிக வளர்ச்சி மற்றும் இலக்குகளைக் கொண்ட சந்தைகளில் ஆதிக்கம் செலுத்தும் முன்னணி நிலை ஆகியவற்றின் அடிப்படையில், இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 14 நாடுகளைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், 'Asia Emerging Markets Solution Provider of the Year Client Solutions Group' எனும் பிரிவில் போட்டியிட்டிருந்தன. இதில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மங்கோலியா, மாலைதீவு, நேபாளம், பூட்டான், புருணை, திமோர்-லெஸ்டே, பிஜி, கம்போடியா, மியன்மார், லாவோஸ், பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன

இந்த சாதனைகள் குறித்து Softlogic Information Technologies நிறுவனத்தின் பணிப்பாளரும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான ரொஷான் ரசூல் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நிதியாண்டில் இரண்டு விருதுகளை நாம் வென்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த இரண்டு விருதுகளும் எமக்கு பெரும் மதிப்பை வழங்கியுள்ளன. நாட்டில் உள்ள வர்த்தகத்திலிருந்து வர்த்தகத்திற்கான (B2B) தொடர்பில் DELL இற்கு நாம் சிறந்த பங்குதாரராக உள்ளோம். அத்துடன், ஆசியாவின் வளர்ந்து வரும் பங்குச்சந்தைகளில் சிறந்த பங்குதாரராகவும் உள்ளோம். கொவிட்-19 பாதிப்புகள் மற்றும் தொடர்ந்தும் நிலவி வரும் பொருளாதார நெருக்கடிகள், எமக்கு



மிகப்பெரும் சவால்களாக இருந்தன. ஆயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், DELL இன் வணிக வருமானத்தை 80% இலும் அதிகமாக அதிகரிக்க முடிந்துள்ளது. இது தனித்துமான அடைவு என்பதுடன் இறுதிப் கணனி பயனர் தீர்வு, நிறுவன வணிக தீர்வுகள், இணையப் பாதுகாப்பு, மேம்பட்ட உட்கட்டமைப்பு தீர்வுகள் ஆகியவற்றில் ICT துறையில் வளர்ந்து வரும் மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் எமது குழுவினர் உரிய தீர்வுகளை வழங்கிதன் மூலமே இந்நிலையை அடைந்துள்ளதால், இவ்வெற்றி அவர்களையே சென்றடைய வேண்டும். உட்கட்டமைப்பு நவீனமயமாக்கலில் முன்னணியில் இருப்பதே 2 வருடங்களுக்கு முன்னர் எமது இலக்காக இருந்தது. நாம் எதிர்பார்த்த காலத்தை விட குறைவான காலகட்டத்தில் இந்நிலையை அடைந்துவிட்டோம் என்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்." என்றார்.

# புலிகள் மீள் உருவாகுவதாக தமிழகத்தில் சந்தேகம்

## செங்கல்பட்டு பகுதியில் தேடுதல் பணி



இலங்கையிலும் இந்தியாவிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயுத மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் நேற்று இந்திய தேசிய புலனாய்வுத்துறையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்த தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை மீண்டும் புதுபிக்கும் நோக்கில் ஆயுதம் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்படுவதாக இந்திய தேசிய புலனாய்வுத்துறை சந்தேகிக்கிறது.

இதன் அடிப்படையில் இலங்கையின் போதைப்பொருள் கடத்தல்காரர் குணா என்ற குணசேகரன், புஸ்பராஜ், பூக்குடி கண்ணா மற்றும் பாகிஸ்தானை சேர்ந்த ஆயுதக் கடத்தல்காரரான ஹாஜி சலீம் ஆகியோருடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரின் வீட்டிலேயே இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தேடுதலின்போது ஆவணங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக என்ஐஏ என்ற இந்திய தேசிய புலனாய்வு பிரிவு அறிவித்துள்ளது.

# 2 மாதங்களில் 21 சூட்டு சம்பவங்கள்

## உயிரிழப்பு 23 ஆக பதிவானது



நாட்டில் பல்வேறு பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் இடம்பெற்ற 21 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களில் இதுவரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் 21 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன . இதன்போது துப்பாக்கி சூட்டுக்கு இழக்காகி இதுவரையில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிசூட்டுக்கு இழக்காகி உயிரிழந்தவர்கள் அதனுடன் தொடர்புடையவர்களாவர்.

மேலும், வெளிநாடுகளில் தங்கியிருக்கும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் பின்னணியில் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

04

மரத்தில் ஏறிய சிறுத்தை:

# வெட்டப்பட்ட அதே மரம் வீழ்ந்ததில் உயிரிழந்தது!

## ஹட்டன் டிக்கோயா பகுதியில் சம்பவம்!

**க.கிஷாந்தன்**



ஹட்டன், டிக்கோயா – வனராஜா சமர்வில் தோட்டப் பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய சிறுத்தை புலியை உயிருடன் பிடிக்க எடுத்த நடவடிக்கை தோல்வியடைந்ததாக நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று (07) காலையில் சமர்வில் தோட்டப் பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த குறித்த சிறுத்தை காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் ஏறியுள்ளது.

நான்கு அடி நீளம் கொண்ட ஆண் சிறுத்தை, மரத்தில் இருப்பதை அவதானித்த பிரதேசவாசிகள், ஹட்டன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகைத் தந்ததுடன் சிறுத்தையை பிடிப்பதற்காக

04



# ஹம்பாந்தோட்டை நன்னீர் மீன்பிடித் தொழிலை கட்டியெழுப்ப நடவடிக்கை

## பிரதி சபாநாயகரின் நிதியொதுக்கீட்டில் மீனவர்களுக்கு படகுகள்



ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களை கட்டியெழுப்ப பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

நன்னீர் மீன்பிடித்தலை ஜீவனோபாயமாக மேற்கொண்டு தொழில் செய்து வரும் 160 மீனவக் குடும்பங்களுக்கு இலகுவாகவும் சிரமமின்றியும் தொழிலில் ஈடுபடுவதற்காக இத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக தெரிவு செய்யப்படும் மீனவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கென பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ ஒருகோடி ரூபாவிற்கும் மேற்பட்ட தொகையினை ஒதுக்கி இருந்தார். சூரியவெள பிரதேச செயலக பிரிவிலுள்ள நன்னீர் மீனவர்களுக்கு பைபர் படகுகளை வழங்கிவைக்கும் நிகழ்வு அண்மையில் பிரதி சபாநாயகர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

### சமையல் எரிவாயுவின்...

தெரிவிக்கின்றன. அதேவேளை, இன்றைய தினம் அமைச்சரவையில் அதற்கான பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு விலை குறைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு அமைச்சரவை மூலம் வெளிப்படுத்தப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்படும் பட்சத்தில் உணவுப்பொதிகள் மற்றும் தேநீர் விலைகளில் விலைக் குறைப்பு மேற்கொள்ளப்படும் என சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் முதல் லிட்ரோ நிறுவனம் லாபம் ஈட்டி வருவதாகவும் அதற்கமைய கம்பனி செலுத்த வேண்டிய கடன்களை அடைத்து வருவதாகவும் நிறுவன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். எரிவாயு விலை குறைப்பு தொடர்பான தகவலை நிதி அமைச்சும் நேற்று உறுதி செய்தது.

லிற்றோ சமையல் எரிவாயு விலை 4910 ரூபா முதல் 5220 ரூபா வரை விற்கப்படுகிறது. டொலர் நெருக்கடி காரணமாக சந்தையில் எரிவாயுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்ட நிலையில் கருப்புச் சந்தையில் இதனை விட அதிக விலைக்கு சமையல் எரிவாயு விற்கப்பட்டதோடு எரிவாயு பெற பல வாரங்கள் வரை காத்திருக்க நேர்ந்தது. ஆனால் கடந்த சில வாரங்களாக சீராக எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்பட்டதோடு தட்டுப்பாடின்றி எரிவாயு பெற வசதி அளிக்கப்பட்டது தெரிந்ததே.

### 'புளொட்' அமைப்பின் ...

இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாக தெரிவு இடம்பெற்றது.

இதில் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக நா. இரட்ணலிங்கமும் பொருளாளராக க.சிவநேசனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் இந்த பொதுச்சபைக் கூட்டத்தில் 145 பேராளர்கள் வரை கலந்து கொண்டனர்.

இந்தநிலையில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது தேசிய மாநாடு இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

### திங்கள், செவ்வாய்,....

செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த வாரம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் பாடசாலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் எதிர்வரும் வியாழக்கிழமை அரச விடுமுறை தினமாகும் என்பதால் அடுத்த வாரம் புதன்கிழமை பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெள்ளிக்கிழமை மாணவர்களுக்கு வீட்டுப் பாடங்களை வழங்குதல் அல்லது இணையவழியில் கற்பித்தல் பணிகளை முன்னெடுக்க முடியும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வடமாகாணத்தில், இன்று முதல், 5 நாட்களும் பாடசாலைகளை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தூர பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்கள், வாரத்தில் 3 நாட்களுக்கு மாத்திரம் பாடசாலைக்கு செல்ல அனுமதி வழங்கப்படுவதாகவும் வட மாகாண கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### கொழும்பில் வேகமாக ...

விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

டீயு5 என்ற கொரோனா உப திரிபானது, கொழும்பில் வேகமாக பரவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், மேலும் சில கொரோனா நோயாளர்களின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குறித்த வைரஸ் தொடர்பான புதிய தகவல்களை அதன் பின்னர் கண்டறிய முடியும் என விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

### நாட்டை கட்டியெழுப்பும் ...

இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கான பொது வேலைத்திட்டத்தை பலப்படுத்துவதற்கு தயாராக உள்ளமை தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அதனை வரவேற்றார்.

அமைச்சு பதவியை பெற்றுக் கொள்ளாது, அதற்காக போட்டியின்றி நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க தயாராக இருக்கிறோம்.

பாராளுமன்றில் உள்ள 225 உறுப்பினர்களுக்கான தொகையை கூட ஒதுக்க முடியாத நிலையில் நாடு உள்ளதாக எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

### உணவுப் பொதி,...

எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். சந்தையில், எரிவாயு தட்டுப்பாடு நீங்கியுள்ளமையால், சிற்றுணவகங்கள் தொடர்ந்தும் இயங்குகின்றன.

பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமையால், உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், எரிபொருளின் விலை இரண்டு கட்டங்களாக 30 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த நிவாரணத்தை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் உணவுப் பொதியினதும், தேநீர் கோப்பையினதும் விலைகளை இன்று முதல் குறைக்க உள்ளதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் மெலும் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு என்பன காரணமாக கடந்த காலங்களில் பெரும்பாலான சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் போன்றன மூடப்பட்டதோடு பொருட்களின் விலை உயர்வுடன் பேக்கரி பொருட்கள் உட்பட உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்தமை தெரிந்ததே.

### இலங்கைக்கு ஒருபோதும்...

வாங் யீ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை கம்போடியாவில் சந்தித்தார். இதன் போதே அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

இதன்போது, சீன அரசாங்கமும் மக்களும் இலங்கைக்கு அவசரகால மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளதுடன் இருதரப்பு மற்றும் பல தரப்பு வழிகள் மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்குவதாக சீன அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் புதிய அரசாங்கம், நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்லும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, ஒரே சீனா கொள்கையில் இலங்கை உறுதியாக இருப்பதாகவும் சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடும் மற்றும் பதற்றத்தைத் தூண்டும் எந்தவொரு செயலையும் எதிர்க்கிறது என்றும் குறிப்பிட்டார்.

### இலங்கையில் விரைவில் ...

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை பல வருடங்களாக முன்னெடுத்துச் சென்ற ரணில் விக்கிரமசிங்க இம்முறை ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளமை ஊக்கமளிப்பதாக ஜப்பானிய பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதையும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறை முன்னேற்றம் அடையும் என்றும் கிஷிடா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

### சர்வகட்சி அரசு...

பிரதான கட்சிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளன. சர்வகட்சி அரசாங்கம் அமைய வேண்டும் என அந்தக் கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

அந்த அரசாங்கத்தை எவ்வாறு அமைப்பது என்பது குறித்து, வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள ராமான்ய நிக்காயாவின் மாகாநாயக்கர், அரசியல் தொடர்பில் பேதங்கள் இருந்தாலும், தலைமைத்துவம் குறித்து நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி கடந்த வாரம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரிணி, சுயேச்சையாக செயற்படும் ஆளும் தரப்பு குழு, தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்பினர்களுடனும் மதத்தலைவர்களுடனும் பேச்சு நடத்தியது தெரிந்ததே.

### மின்சார கட்டணத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் பொதுமக்களின் கருத்துக்களும் பெறப்பட்டு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை, மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வதற்கான பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக எட்டுப் பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். ஒரு மாத காலத்திற்குள் குறித்த பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்த குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வருகையை ஒத்திவைக்க... (03 ஆம் பக்கத் தொடர்)

இரண்டு அணுமின் நிலையங்கள் உட்பட பல பாதுகாப்பு மத்திய நிலையங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று இந்தியா கருதுகிறது.

எவ்வாறாயினும், கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு சீனாவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

### அரச வங்கியில் 68.3... (03 ஆம் பக்கத் தொடர்)

சேர்ந்த 62 வயதுடையவர் என்பதுடன் குறித்த நபரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

### 2 மாதங்களில் 21 சூட்டு... (03 ஆம் பக்கத் தொடர்)

இதுவரையில் சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. மேலும், இந்த சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பொலிஸ் தலைமையகம் ஊடாக அனைத்து மாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்றும் புலனாய்வு பிரிவினருக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

### வெட்டப்பட்ட அதே மரம்... (03 ஆம் பக்கத் தொடர்)

நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து, சிறுத்தையை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில், நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததுடன், சிறுத்தை ஏறிய மரத்தை வெட்டியுள்ளனர்.

இதன்போது சிறுத்தையின் மீதே மரம் வீழ்ந்ததால் சிறுத்தை உயிரிழந்ததாகவும் தெரிவித்த அதிகாரிகள் பிரேத பரிசோதனைக்காக சிறுத்தையை ரந்தெனிகல வனவிலங்குகள் திணைக்களத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்தனர்.

அத்துடன், பொறியில் அமைக்கபட்டிருந்த கம்பியால் சிறுத்தையின் உடலில் காயங்கள் இருப்பதால், இது தொடர்பில் அட்டன் நீதவான் நீதிமன்றுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### சரத் பொன்சேகாவின்...

ரணில் விக்கிரமசிங்கவிற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கட்சி உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி அலவத்துவல தெரிவித்துள்ளார்.

### அவசர கால சட்ட...

மற்றும் கைது' தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் நீக்கப்பட்டு அதே குறியீட்டின் பிரிவுகள் 408 மற்றும் 410 முதல் 420 வரை அவசரகாலச் சட்ட விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் மேல் நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்படும் தண்டனை தொடர்பான குற்றவியல் சட்டத்தின் 365, 365 (ஏ) மற்றும் 365 (பி) அவசர உத்தரவுகளும் நீக்கப்பட்டுள்ளன

### கட்சி பணிகளை...

இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் கட்சி மறுசீரமைப்பு, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. அண்மைய அரசியல், பொருளாதார நெருக்கடி காரணமாக கட்சி செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் தமது அமைச்சு பதவிகளை கைவிட்டு அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன அண்மையில் கட்சி தலைமையகத்திற்கு சென்று கட்சி முக்கியஸ்தர்களை சந்தித்தது தெரிந்ததே.

### இராணுவ தளபதியை...

இராணுவத்தின் பங்களிப்பு குறித்து கருத்துகளை பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இந்த சுருக்கமான சந்திப்பின் போது, யாழ்ப்பாணத்தில் சிவில் இராணுவ ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து சிவில் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

சுமுகமான சந்திப்பின் முடிவில் லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே அவர்கள் வடமாகாண ஆளுநருக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி இலங்கை இராணுவத்தின் நல்லெண்ணத்தை அடையாளப்படுத்தியுள்ளார். இராணுவத்தொண்டர் படையின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா மற்றும் துணைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க ஆகியோரும் இன்றைய சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

### இந்திய மக்களுக்கு நன்றி...

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தனது டுவிட்டரில் இதனை பதிவிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நீடித்த நட்புறவு மலர்ந்துள்ளதாக பிரதமர் மோடி அனுப்பிய வாழ்த்துக் கடிதத்திற்கு பதிலளித் பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவும், இலங்கையும் பல துறைகளில் பரஸ்பரம் பலனளிக்கும் கூட்டாண்மையாக பல ஆண்டுகளாக வளர்ச்சியடைந்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக பிரதமர் மோடி, கடந்த திங்களன்று இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தில் வெளிப்படுத்தியிருந்தார். இலங்கை மக்களின் செழிப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்து, விரைவான பொருளாதார மீட்சி காணப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

### சர்வ கட்சி அரசுக்கு...

ஒன்றிணைந்து செயற்படுமாறு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி கட்சி பிரதிநிதிகளுடனான நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ரணில் விக்கிரமசிங்க இந்த முன்மொழிவை முன்வைத்தார்.

1941 ஆம் ஆண்டு, பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி, எதிர்க்கட்சி நிலையையும் வகித்துக்கொண்டு அமைச்சு பதவியையும் ஏற்றுக்கொண்டது.

இதன்படி முழு நாடாளுமன்றமும் அரசாங்கமாக மாற்றப்பட்டது. அதே முறையை இலங்கையிலும் செயல்படுத்தலாம் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை தொடரும் எண்ணம் தமக்கு இல்லையென்றாலும் எதிர்கால பொருளாதார திட்டங்களின்போது அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இந்தநிலையில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். அத்துடன் அமைச்சு பதவிகளுக்கு முன்னுரிமை வழங்காமல் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரச் சுமைக்கு தீர்வுகளை தேடுவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார்.

### குரங்கு அம்மை...

ஹம்தானி தெரிவிக்கையில்: கொழும்பு பொரளையில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை சுற்றாடலிலும் நாளை முதல் குரங்கு அம்மை நோய் பரிசோதனை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு அந்த நோய் தொடர்பான அறிகுறிகள் காணப்படுபவர்களுக்கு விசேட பரிசோதனைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குரங்கு அம்மை நோய்க்கு தேவையான முன்னோடி ஆயத்த நடவடிக்கையாக பரிசோதனை உபகரண தொகுதி உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கடந்த சில தினங்களுக்கு முன் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்த தொகுதியில் 125 பரிசோதனை உபகரணத் தொகுதிகள் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை குரங்கு அம்மை நோய் தொற்றாளர் எவரும் இனங்காணப்படவில்லை.

### சவால்களை வெற்றி ...

நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என செயலாளர் நாயகம் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான தேசிய மூலோபாயத்தை வகுப்பதில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கான ஜனாதிபதியின் உறுதிப்பாட்டை ஐ.நா பொதுச்செயலாளர் ஒப்புக்கொண்டுள்ளார். சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளிப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், பொது மக்களுடன் கலந்தாலோசிப்பது உட்பட அனைவருடனான ஒருமித்த கலந்துரையாடல்களை அவர் வரவேற்றுள்ளார்.

மேலும், பெண்களின் அரசியல் பங்கேற்புக்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு ஜனாதிபதி வழங்கும் தலைமைத்துவத்தை அவர் பாராட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர்களுக்கு ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானம், நிலையான அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபை ஒத்துழைப்பைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறது எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

### பொதுவான வேலைத்திட்டம் ...

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார்.

சர்வகட்சி தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர்,

"நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மாற்றி அமைப்பதற்காகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையிலும், கியூவில் நின்று பொருட்களை பெறும் கலாசாரத்தை முற்றாக ஒழிக்கும் வகையிலும் ஜனாதிபதி எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம் எனவும் இச்சந்திப்பில் உறுதியளித்தோம்.

மேலும், காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிவைத்து கைது செய்யப்பட்டமை மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்டாலினின் கைது தொடர்பிலும் எமது ஆட்சேபனையையும் கவலையையும் தெரிவித்ததோடு, இவ்வாறான பயமுறுத்தல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை இன்னும் அதல பாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

19 ஆவது திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து, அதனை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும், பாராளுமன்றத்தில் அமைச்சுக்களை கண்காணிக்கும் குழுக்களை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம். அத்துடன், அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி, வகைதொகையின்றி ஆட்களை கைது செய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்துவதுடன், அவசரகாலச் சட்டத்தில் தொடர்ந்து நீடிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினோம்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி ஆட்சிக்கு வந்தவர்கள், கடந்த காலங்களில் நாட்டினதும், மக்களினதும் நலனைக் கருத்திற் கொள்ளாது செயற்பட்டமையை உணர்த்தியதுடன், இனவாதத்தை விதைப்பதன் ஊடாக தங்களது அரசியல் இருப்பு நீடிக்கும் என்ற தப்பெண்ணம் கொண்டு செயற்பட்டதனால்தான், இந்த நாடு இவ்வாறான கீழ்நிலைக்கு தள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆகையால், எதிர்காலத்தில் இனவாத சக்திகளின் கரங்களை ஓங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் எனவும், அந்த விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்" என்று அவர் தெரிவித்தார்.

### கனடாவில் இலங்கை...

கனடாவுக்கு தங்கள் சேவையை ஆற்றியவர்களை கௌரவிக்கும் வகையில் Canadian Immigrant என்னும் பத்திரிகை அளிக்கும் கௌரவமாகும். Top 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருது பெறுவோர் பட்டியலில் ரொரன்றோ பகுதியைச் சேர்ந்த எட்டு பேருக்கு இடம் கிடைத்துள்ளது.

அவர்கள், பிலிப்பைன்சிலிருந்து வந்த Patrick Alcedo, இந்தியாவிலிருந்து வந்த Diana Alli D'Souza, பஹாமாஸ் தீவுகளிலிருந்து வந்த Raquel Fox, இலங்கையிலிருந்து வந்த Sivakumar Gulasingam, நேபாளத்திலிருந்து வந்த Bhutila Karpoche, அல்ஜீரியாவிலிருந்து வந்த Mohamed Lachemi, தென்கொரியப் பின்னணி கொண்ட Paul SunHyung Lee, பிரேசில் நாட்டிலிருந்து வந்த Arnon Melo ஆகியோர் ஆவர்.

இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ள சிவகுமார் குலசிங்கம் இலங்கையிலுள்ள National Rehabilitation Hospital என்னும் மருத்துவமனையில் முன்னணி மருத்துவராக இருந்தவர் ஆவார்.

அப்படி ஒரு முன்னணி மருத்துவராக இருந்த அவர், 2008ஆம் ஆண்டு கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பிறகு, மருத்துவத் தொழில் செய்வதற்கான உரிமம் பெறுவதற்கு அவர் மிகவும் கஷ்டப்படவேண்டியிருந்தது.

# வேதாரம்பம் செய்யும் ஆவணி அவிட்டம்

அந்தணர்களாக பிறந்த ஒவ்வொருவரும் எட்டு வயதில் உபநயனம் பூணூல் சடங்கை நடத்திக் கொள்ள வேண்டும். அதிபுத்திசாலியாக, மஹா மேதாவியாக இருந்தால் ஐந்து வயதில் கூட பூணூல் போட்டு விடலாம். பதினாறு வயதிற்கு மேல்உபநயனம் செய்வது என்பது பெயரளவுக்கு மாத்திரமே என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

உபநயனம் என்பதில் இரண்டு காரியங்கள் இருக்கின்றன. ஒன்று பூணூல் போட்டது முதல் ஆசாரங்கள், ஒழுக்கங்கள் இன்றியமையாதது. ஆகவே பூணூல் சமஸ்காரம் என்பது மனிதன் மனித வாழ்க்கையில் ஆன்மிக உயர்நிலை

அடைவதற்காக ஏற்பட்டது. இரண்டாவது, உபநயனத்தில் பூணூல் போட்டுக் கொள்வது என்பது பிரதானமாக பேசப்படுகிறது. ஆனால் உபநயனத்தின் முக்கிய

அம்சம் ஒரு பெரியோரின் மூலம், ஒரு குருவின் மூலம், அல்லது தகப்பனாரின் மூலம் வேதோக்தமான காயத்ரீ மந்திரத்தை ஏற்றுக்கொள்வதே முக்கிய நோக்கமாகும். அதற்கு அங்கமாகத்தான் சுத்தமாயும், பவித்ரமாயும் பூணூல் போட்டுக் கொள்வது. இதை வைத்துத்தான் உபநயனம், ப்ரம்மோபதேசம் என்று சொல்லுகிறோம்.

உப நயனம் என்ற இரண்டு சொற்களின் அர்த்தம் காயத்ரீ மந்திரத்தைக் கற்றுக் கொள்வதற்கு குருவின் சமீபம் அழைத்துச் செல்லுதல் என்று பொருள்.

இந்த வேதம் படிப்பதற்கு காலங்கள் சொல்லப் பட்டு இருக்கின்றன. தக்ஷிணாயனம் என்று சொல்லக்கூடிய ஆறு மாதங்கள், வேதம் சொல்லக் கூடிய காலங்கள். உத்ராயணத்தில் அந்த வேதத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்வதற்கு சம்ஸ்க்ருதத்தையும், உப அங்கங்களையும், தர்ம சாஸ்திரத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும். தை,மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி இந்த ஆறு மாதங்களும் உத்தராயணம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த ஆறுமாதங்கள் தக்ஷிணாயனம். ஆவணி மாதத்தில் அவிட்டநட்சத்திரத்தில் வரக்கூடியது ஆவணி அவிட்டம். இதையே எல்லோரும் பொதுவாக ஆவணி அவிட்டம் என்பார்கள். ஆடிமாத அமாவாசைக்கு பிறகு

ச்ராவண மாசம் என்பத சாந்திரமான கணக்குப் படி வரும். ச்ராவண மாசத்தில் ச்ரவண நட்சத்திரத்தன்று ஒரு தோஷமும் இல்லாமல் இருந்தால் யஜுர் வேதிகள் ஆவணி அவிட்டம், உபாகர்மா செய்து கொள்வார்கள்.

சாம வேதத்திற்கு ஆவணி ஹஸ்தம் எடுத்து இருக்கிறது. இப்படி ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் மாறி வந்தாலும் ருக் வேதம்தான் முதன்மையாக இருப்பதினால் அந்த ஆவணி அவிட்டத்தையே எல்லோரும்

உபாகர்மா என்று பெயர் வைத்து விட்டார்கள். இந்த உபாகர்மா அன்று தக்ஷிணாயத்தில் ஆறுமாதத்திற்கான வேத பாடங்களை படித்து முடித்து உத்தராயண ஆரம்பத்தில் அந்த வேதத்திற்கான அர்த்தங்களையும், தர்ம சாஸ்திரத்தையும்

தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி முடியாதவர்கள் ஆவணி அவிட்டத்தில் தாங்கள் படித்த வேத பாகத்தை பூர்த்தி செய்து கொண்டு, ஆவணி அவிட்ட உபாகர்மாக்களைச் செய்து கொண்டு திரும்பவும் அன்று வேத பாடங்களை ஆரம்பம் செய்ய வேண்டும். இதுவரை வேத பாடங்களைப் படித்து வந்ததில் உள்ள குறைகளை நீக்குவதற்கும், மேலும் நல்ல பலத்துடன் படிப்பதற்கு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும் என்று சொல்லப் பட்டு இருக்கிறது.

வேத சாஸ்திர பாடங்களை அந்தந்த காலத்தில் ஆரம்பித்து முடிக்காததற்காகத்தான் பரிகாரமாக "காமோகார்ஷீத்" ஜபம் சொல்லப்பட்டு இருக்கிறது.

பலரும் வீட்டிலேயே வாத்தியாரை வரவழைத்து பூணூலை மட்டும் புதிதாக மாற்றிக் கொள்கிறார்கள். மற்ற எந்த ஒரு வித வேத கர்மாவுக்கும் அங்கு இடமில்லாமல் போய் விடுகிறது. ஆவணி அவிட்டத்தில் பூணூல் மாற்றிக் கொள்வது முக்கியமாக இருந்தாலும், பூணூலை மாற்றிக் கொள்வது எதற்காகவென்றால் வேதம் படிப்பதற்கு முன்பு புனிதமாக ஆகவேண்டும் என்பதே முக்கியம். பூணூலை மாற்றிக் கொள்வதற்கு மட்டும் இல்லை. பூணூலை மாற்றிக் கொண்ட பிறகு சிறிது அளவாவது வேதாரம்பத்தை செய்த கொள்ள வேண்டும். ஆகவே ஆவணி அவிட்டத்தில் வேதாரம்பம் செய்வது முக்கியம்.

## சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



**அம்மையார் எழுதியுள்ள நூல்கள்:**

காரைக்காலம்மையார் கி.பி. 300500 ஆகிய காலப் பகுதியில் வாழ்ந்தவர் என அறிஞர்கள் கருதுகிறார்கள். மேலும் இறைவனை இசைத் தமிழால் பாடியவர்களில் இவரே முதலாமவர். ஒரு பாடலின் இறுதி வார்த்தையை அடுத்த பாடலின் முதல் வார்த்தையாகப் பயன்படுத்தி எழுதும் அந்தாதி முறையை முதன்முதலில் அறிமுகப் படுத்தியவரும் இவரே.

83

தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயருடனேயே பரமேஸ்வரன் "அம்மையே" என்று அழைத்ததை இணைந்து "காரைக்கால் அம்மையார்" என்று அறியப்படும் இவர் இயற்றிய பாடல்கள் அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு (22 பாடல்கள்), திரு இரட்டை மணிமாலை 20 பாடல்கள் ஆகும். தேவார காலத்துக்கு முந்தி இயற்றப்பட்ட இவரது பதிக முறையைப் பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரம்,தேவாரப் பதிகங்கள் அமைந்தன.

**இறைவனின் பெயர்கள்:**

தனது பாடல்களில் இறைவனுக்கு பல பெயரிட்டு வழங்குகிறார் காரைக்கால் அம்மையார். அடிகள், அழகன், அந்தணன், அரன், ஆதிரையான், ஆள்வான், இறைவன், ஈசன், உத்தமன், எந்தை, எம்மான், என் நெஞ்சத்தான், கண்ணுதலான், கறைமிடற்றான், குழகன், சங்கரன், நம்பன், பரமன், பரமேஸ்வரன், புண்ணியன், மாயன், வானோர் பெருமான், விமலன், வேதியன், ஏகாம்பரநாதர், சதாசிவம், அப்பா என்று பல. ஆனால் சைவ சமயம் என்ற சொல்லுக்கு ஆதாரமான சிவன் என்ற சொல்லே அம்மையாரது பாடல்களில் காணப்படுகிறது.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19209) லட்சுமி நோன்பிருந்து வணங்கினால் என்ன நன்மை கிடைக்கும்? **தீர்க்க சுமங்கலி வரம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.**

(19210) மகாவிஷ்ணுவின் மார்பை அலங்கரிப்பது யார்? **மகாலட்சுமி**

(19211) வரலட்சுமி விரதம் ஏன் கடைபிடிக்கப்படுகிறது? **மகாவிஷ்ணுவின் மார்பை அலங்கரிக்கும் மகாலட்சுமிக்கு நன்றி தெரிவிக்கும் விரதமாக வரலட்சுமி விரதம் கடைபிடிக்கப்படுகிறது**

(19212) வரலட்சுமி நோன்பை கடைபிடித்தவர்கள் பெரும் பயனை அடைந்தார்கள் என்று எந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது? **பத்ம புராணத்தில்**

(19213) அன்னை மகாலட்சுமி எதில் இருந்து உதித்தாள்? **மாதுளம் கனியிலிருந்து உதித்ததால்**

(19214) அன்னை மகாலட்சுமி மாதுளம் கனியிலிருந்து உதித்ததால் என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகிறாள்? **மாதுளங்கி**

(19215) பத்மாவதி என்று அழைப்பது யாரை? **அன்னை மகாலட்சுமியை**

(19216) அன்னை மகாலட்சுமியை பத்மாவதி என்று அழைப்பது ஏன்? **பத்மாசனால் வளர்க்கப்பட்டதால்**

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 1



நற்செயல் புரிபவரையே தெய்வம் விரும்பும். எவனொருவன் உகந்த செயல்களை செய்கிறானோ, கடவுளின் நோக்கத்திற்கிணங்க வாழ்க்கை நடத்துகிறானோ, அவனுக்குத்தான் தெய்வ கடாக்ஷம் கிட்டும். தூங்கிக் கொண்டு பொழுதை போக்கும் சோம்பேறிகளை தெய்வமும் வெறுக்கும். மனிதன் தெய்வசக்திகள் அனைத்தும் பெற்றிட விரும்பவேண்டும் என்று கடவுள் நினைக்கிறார்.

தெய்வநம்பிக்கை இழந்தவனுக்காக இந்த உலகம் இயங்கவில்லை. அசுர எண்ணம் கொண்ட அவர்களை இந்த பூமித்தாய் தன் மடியில் தாங்கிக் கொண்டுள்ளார். அவர்கள் வெளியேறும் காலம் வந்துவிடும். அப்படி அவர்களை இயற்கை வெளியேற்றும் காலம் வெகு தொலைவில் இல்லை. அனலிடைப்பட்டவர்கள் போல் அவர்கள் துடிப்பது உறுதி. மயக்கம், பிரமை, சோம்பேறித்தனம் அறியாமை ஆகியவைகளை கைவிட்டு, விழிப்புணர்வை வரவழைத்துக் கொள்ளுங்கள். புனிதமான வெளிச்சத்தை நோக்கி முன்னேறுங்கள். அதன் மூலம் மனிதர்களாகிய நமக்கு சித்தி கிடைக்கும். மேலும்ஆன்ம லாபமும்உண்டாகும்.

இந்த தெய்வீக விழிப்புணர்வு எங்ஙனம் அமையும்? முதலில் நாம் நம் இயல்புகளை ஏற்றுக் கொள்வோம். நம்மை அந்த பரமபிதா, பராமத்மாவின் மைந்தர்கள், அவரின் பிரதிநிதிகள் என அனுபவபூர்வமாக உணர்வோம். நம்மிடமுள்ள தீயகுணங்கள் அனைத்தையும் தூக்கி எறிவோம். தீயகுணங்கள் அகன்றதும் நம் உள்ளத்தில் தெய்வீக தீப ஒளிபிரகாசித்து சுடர்விடும். உலகமே ஒளியமாக விளங்கும். தாம்எங்கும்பரவி அழகுற விளங்குகிறோம் என்ற உணர்வு மேம்படும். நாலாபுறமும் ஆனந்தம் சூழும். அமரத்தன்மை பெறும். வாழ்க்கை தெய்வீகத்தை நோக்கி முன்னேறும். கடவுள் படைப்பில் மனிதனைவிட சிறந்த படைப்பு ஏதுமில்லை.

மனித ஆற்றல்களில் எண்ணத்தின் ஆற்றலுக்கு மிகுந்த வலிமையுண்டு. எண்ணத்தின் ஆற்றல் பெற்ற ஒருவன் லட்சக் கணக்கான மனிதர்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்த முடியும். எண்ணத்தின் ஆற்றல் கொண்ட ஒருவன். எவ்வித பயன்பாட்டு சாதனங்கள் இல்லாமலும் அவனால் முன்னேற்றக்கூடியபாதையினை உருவாக்க முடியும், எண்ண ஆற்றலின் மூலமே பல மாமனிதர்கள் சமூகத்தையும் தேசத்தையும் நிர்மாணித்தனர். எண்ண ஆற்றல் கொண்டவனே வாழ்க்கை பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மீகவாதியாக வலம் வர முடியும். எண்ணத்தின் ஆற்றலின் மூலம் தான் மகான்கள் பராமாத்வை உணர்ந்துள்ளனர்.

மனிதனின் வாழ்வை உருவாக்குவதற்கான வசதி செய்வதிலும் உருக்குலைய வைப்பதிலும் அவனது எண்ண ஆற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. மனித வாழ்வு எண்ணங்களின் அடிப்படையில் தான் அமைகிறது. கெட்ட எண்ணங்களைக் கொண்டு ஒருவன் தன் வாழ்வை முன்னேற்றிக் கொள்ள முடியாது. அவர்கள் வெற்றி பெறுவது போல் காணப்பட்டாலும் வீழ்ச்சி அடைந்தே தீருவர். இது உண்மையான உண்மை.

எனவே, உங்கள் எண்ணங்களை ஆய்வு செய்யுங்கள். உங்கள் எண்ணங்களை வலுவாக்கிக் கொள்ளுங்கள். தவறான எண்ணங்களை அகற்றுங்கள். நல்லெண்ணங்களை வளர்த்து கொள்ளுங்கள். உங்களின் நல்லெண்ணங்களுக்கேற்ப வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதன் மூலம் வாழ்வில் அமைதி, சுகம் போன்ற நன்மைகள் கிடைக்கப் பெறுங்கள்.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## வெள்ளவத்தை அருள்மிகு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா



















(படங்கள்: தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 09

### குறள் தரும் சிந்தனை

அறிவுரு வாராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

*தூது உரைக்கும் செயலை மேற்கொள்பவர் அறிவு, தோற்றப் பொலிவு, ஆய்ந்து தெளிந்த கல்வி ஆகிய மூன்றும் நிறைந்தவராக இருத்தல் வேண்டும்.*

## நெருக்கடி நீங்கும் வரை மக்கள் பொறுமை காப்பது அவசியம்!

நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட கியூவரிசைகள் பெருமளவில் இப்போது குறைந்து விட்டன. பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் ஓரிரு நிமிடங்களிலேயே எரிபொருளை நிரப்பிக் கொள்ள முடிகின்றது. சில பிரதேசங்களில் சிறிய தூர கியூவரிசையே காண முடிகின்றது. டீசல் பெறுவதற்காக வாகனங்கள் சிறிய தூர கியூவரிசையிலேயே காத்து நிற்கின்றன. நெடுநேரம் காத்து நிற்க வேண்டிய தேவை தற்போது கிடையாது.

மோட்டார் சைக்கிள்களும், முச்சக்கர வண்டிகளும் பெற்றோல் பெறுவதற்காக நாட்கணக்கில் கியூவரிசையில் காத்து நிற்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்றதும் பெற்றோலை பெற்றுக் கொண்டு திரும்பிவிட முடிவதாக மோட்டார் சைக்கிளோட்டிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் அனைத்து வாகனங்களுக்கும் வாரத்தில் ஒருதடவை, குறிப்பிட்ட அளவு எரிபொருள் மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுகின்றது.

அவ்வாறு வழங்கப்படுகின்ற எரிபொருளானது தங்களது தேவைக்குப் போதுமானதாக இல்லையென்று சில தரப்பினர் புகார் கூறுகின்றனர். இன்றைய QR code முறைமையானது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள போதிலும், வழங்கப்படுகின்ற எரிபொருளின் அளவு போதாமலுள்ளதென்ற புகார் மாத்திரமே சில தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது.

வாரமொரு தடவை தங்களுக்கு வழங்கப்படுகின்ற ஐந்து லீற்றர் பெற்றோல் அன்றாட தொழிலை நடத்துவதற்குப் போதாமல் உள்ளதாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் இரவுபகலாக ஆட்டோக்களை செலுத்தியே தங்களது தொழிலை மேற்கொள்கின்றனர். வாரமொரு தடவை வழங்கப்படுகின்ற ஐந்து லீற்றர் எரிபொருளில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மாத்திரமே தொழில் செய்ய முடியுமென்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் இவ்வாறு கூறுவதில் நியாயம் இல்லாமலில்லை. முச்சக்கரவண்டி வைத்திருப்போரின் அன்றாட தொழிலுக்கு பெற்றோல் அவசிய தேவையாகும். எனவே தங்களுக்கான வாராந்த பெற்றோலின் அளவு அதிகரிக்கப்பட வேண்டுமென்பதே அவர்களது கோரிக்கையாகும். இதே போன்றுதான் நகர்ப்பகுதிகளில் வீட்டுக்கு வீடு உணவு விநியோகம் நடத்துகின்ற தொழிலாளர்களுக்கும் வாராந்தம் கிடைக்கின்ற நான்கு லீற்றர் பெற்றோல் போதாமல் உள்ளது.

மக்கள் போக்குவரத்துக்கான பேருந்துகள் மற்றும் பொருட்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற லொறிகளுக்கும் தற்போது வாராந்தம் வழங்கப்படுகின்ற டீசல் போதாமல் உள்ளதாக குறை கூறப்படுகின்றது. இவர்கள் அத்தனை பேரும் கூறுகின்ற புகார்களில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் எமது நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைமையில், இக்கோரிக்கையை உடனடியாகப் பூர்த்தி செய்வதென்பது இயலாத காரியமாகவே உள்ளது.

இலங்கையில் உள்நாட்டு வருமானம் மோசமாக வீழ்ச்சியடைந்து விட்டது. அந்நிய செலாவணி வருமானமும் பெருவீழ்ச்சிக்கு உள்ளாகி விட்டது. எனவே மோசமான டொலர் பற்றாக்குறை நிலவுகின்றது. நாட்டின் தேவைக்குப் போதுமான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதென்பது இலகுவான காரியம் அல்ல. தேவைக்கேற்ப எரிபொருளை நாம் பெற்றுக் கொள்வதற்கு சில காலம் பொறுத்திருக்க வேண்டியுள்ளது. அதுவரை மக்கள் பொறுமை காப்பதைத் தவிர வேறு வழியே இல்லை.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள QR code முறைமையின்படி, மக்களுக்கு தற்போது வாராந்தம் வழங்கப்படுகின்ற எரிபொருளானது அவரவர் தேவைக்குப் போதுமானதாக இல்லையென்பது அரசுக்குப் புரிகின்றது. ஆனால் ஒவ்வொருவருக்கும் வாராந்தம் குறிப்பிட்ட அளவு எரிபொருள் தவறாமல் கிடைக்கக் கூடியதாக உள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாட்கணக்கில் காத்திருந்தோ, முட்டிமோதிக் கொண்டோ எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவலநிலைமை தற்போது இல்லையென்பதை மக்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேசமயம் எரிபொருள் விநியோகத்தில் நிலவிய முறைகேடும் தற்போது குறிப்பிடும்படியாக இல்லை. பெற்றோலை முறைகேடாகப் பெற்று, திருட்டு வியாபாரம் நடத்துவதற்கு QR code முறைமை முற்றுப்புள்ளி வைத்து விட்டது. ஒரு லீற்றர் பெற்றோலை மூவாயிரம் ரூபா கொடுத்து கள்ளச்சந்தையில் பெற்றுக் கொள்ள வேண்டிய அநீதி இப்போது இல்லை. நாட்கணக்கில் கியூவரிசையில் நிற்பதற்கான திராணி உள்ளவர்களால் மாத்திரமே எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்ற கட்டாயமும் தற்போது கிடையாது. தேவைக்குப் போதுமானதாக உள்ளதோ இல்லையோ, வாராந்தம் குறிப்பிட்ட அளவு எரிபொருளை குளறுபடிகளின்றி பெற்றுக் கொள்ளக் கூடியதொரு நிம்மதி தற்போது ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நாட்டில் நிலவுகின்ற அத்தனை நெருக்கடிகளும் ஒரேநாளில் நீங்கி விடுமென மக்கள் எவரும் எதிர்பார்ப்பது தவறு. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் நீண்ட காலமாக நிலவிய தவறுகளின் பலாபலன்களே இன்றைய நெருக்கடியாகும். அந்நெருக்கடியிலிருந்து நாம் மீண்டு வருவதற்கும் சில காலம் தேவையென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுவரை பொறுமையுடன் காத்திருப்பதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை.

editor.tkn@lakehouse.lk

# கிழக்கில் பிரசித்தி பெற்ற உகந்தமலை, தாந்தாமலை முருகன் ஆலயங்களில் வெள்ளியன்று தீர்த்தோற்சவம்

உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகிய தலங்களின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி தீர்த்தோற்வத்துடன் நிறைவு பெறவுள்ளது. உகந்தமலையானது பொத்துவில், தாண்டியடி, குமுக்கனுக்குச் செல்லும் நீண்டதொடு காட்டுப்பாதையில் அமைந்துள்ளது. இத்தலம் தமிழகத்து குன்றுதோறாடல் மலைக்கோயில்களை நினைவூட்டும் வகையில் அமையப் பெற்றுள்ளது. கடலலைகள் தாலாட்டிசைக்க, பச்சை பசேலென்ற காடுகள் கண்களைக் கவர மலையடிவாரத்தினிலே இவ்வாலயம் கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து மட்டக்களப்பை வாழ்விடமாகக் கொண்ட மார்க்கண்டு முதலியார் 1885 இல் மலையடிவாரத்தில் ஒரு கோயிலைக் கட்டினார். கோளாவிலைச் சேர்ந்த காளியப்பனைக் குருவாகவும் ஜெயசேகர ஸ்ரீ வன்னிதிசாநாயக்க என்பவரை வண்ணக்கராகவும் நியமித்தார். பாணமையைச் சேர்ந்த இவர் சைவ பக்தியும் தமிழ்ப்பற்றுமிக்கவராவார்.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயம் முன்பு ஆலமரத்தடியில் மேடையில் வேல் மட்டும் வைத்து வழிபடப்பட்ட கோயிலாக காணப்பட்டது. ஆலயத்தில் உள்ள வெண்நாவல் மரமே தலவிருட்சமாகும்.

உகந்த மலையை அண்மியுள்ள பாணம, கூமுனை போன்ற இடங்கள் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் வாழ்ந்த இடங்களாவதோடு அவர்களின் வழித்தோன்றலான வேடர் இன்றும் வாழுமிடங்களாகவும் கொள்ளப்படுகின்றன. இவர்களுக்குரிய வேல் வணக்கமே இப்பகுதியில் நிலவியது என்பதற்கு இவ்வாலயம் சான்றாக உள்ளது.

முருகப்பெருமான் கதிர்காமத்தில் குடிகொள்வதற்கு முன்பே உகந்தையில் அமர்ந்ததாக வரலாறு கூறப்படுகின்றது. ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இருமலைக் குன்றுகள் அமைந்துள்ளன. முதலாவது மலை வள்ளி மலை எனவும் அடுத்த மலை பிள்ளையார் மலை எனவும் அழைக்கப்படுகின்றது. ஆலயத்தில் இருந்து கடற்கரைப் பக்கமாக மேலும் மூன்று மலைப் பாறைகள் அமைந்துள்ளன.





கதிர்காமத்தை போலவே இங்கு ஆடிப் பூரணையில் தீர்தோற்சவம் நடைபெறுகின்றது. அந்த வகையில் 29.07.2022 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. எதிர்வரும் 12.08.2022 ஆம் திகதி தீர்த்தமாடுவதுடன் திருவிழா நிறைவு பெறவிருக்கின்றன.

இதேவேளை தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 12.08.2022 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவிருக்கின்றது. தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை கிராமத்திலிருந்து சுமார் 10 மைல் தொலைவில் உள்ளது. இவ்வாலத்திற்குச் செல்லும் வழிப்பாதைகள் யாவும் கதிர்காமத்தை போன்ற ஒரு சூழலையே கொண்டுள்ளது.

நீண்ட பரந்த பல குன்றுகளின் தொடர்ச்சியாக உள்ளது தாந்தாமலை. முற்காலத்தில் மழை பெய்யாமல் வரட்சி ஏற்பட்ட போது தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று தாந்தாமலையின் உச்சியிலுள்ள விநாயகர் பெருமானுக்குப் பொங்கல் விழா நடத்திய வேளை மழை பெய்ததாக வரலாற்றுக் கதைகள் சித்தரிக்கின்றன.

குளக்கோட்ட மன்னன் இலங்கையின் கிழக்குப் பக்கத்தில் எழு சிவமுருகன் ஆலயங்களை அமைத்தான். அவற்றில் ஒன்று தாந்தாமலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம். இவை 5 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மேலும் தாந்தாமலையை பிரதேசத்தை ஆட்சி புரிந்த மன்னன் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து 678 களஞ்சி பொன்னை வைப்புத்திரவியமாக இக்கோயிலுக்கு அளித்துள்ளான் என கோணேசர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புக்களையும் பண்டைய சரித்திரங்களையும் எடுத்தியம்புகின்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய உற்சவம் 12 ஆம் திகதி நடைபெறுகிறது.

**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
(ஓய்வுநிலை அதிபர்) களுவாஞ்சிகுடி

# தினகரன் பத்திரிகைக்கு செம்மையான பாதையை வகுத்துக் கொடுத்தவர் கலாசூரி சிவகுருநாதன்

### இலங்கை பத்திரிகைத்துறையில் சாதனையாளராகப் போற்றப்படும் தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் அமரர் சிவகுருநாதனின் 19 ஆவது நினைவு தினம் இன்று

இலங்கைப் பத்திரிகைத் துறை வரலாற்றில் நெடுங்காலம் ஓர் தேசியப் பத்திரிகையில் பிரதம ஆசிரியராக பணிபுரிந்தவர் என்ற பெருமையைக் கொண்டவர் கலாசூரி இ. சிவகுருநாதன். இலங்கை தமிழ் இலக்கியத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தினகரன் ஏற்படுத்திய பங்களிப்பும், தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதனின் பங்களிப்பும் மிக அளப்பரியதாகும்.

கலாசூரி சிவகுருநாதன் (1931.10.07_ 2003.08.08) யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார். நீண்ட காலமாக பணியாற்றிய ஊடகவியலாளர் என்ற பெருமைக்குரியவர்.

கலாசூரி ஆர். சிவகுருநாதன் பலரை எழுத்தாளர்களாகவும் பத்திரிகையாளராகவும் உருவாக்கியதில் சாதனை செய்துள்ளார். அவரின் வல்லமை, ஆளுமை, எல்லோருடனும் நட்புடன் பழகும் தன்மை சிவகுருநாதன் அவர்களை மக்கள் மனதில் என்றும் பதிய வைத்துள்ளது.

அவரது பத்திரிகைத்துறைப்பணி ஒரு சகாப்தம் என்றே கூற வேண்டும். ஏரிக்கரை தேசிய பத்திரிகை ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக்குரியது. இலங்கையின் தேசிய தினசரிகளில் ஒன்றான 'தினகரன்' என்றவுடன் நமது ஞாபகத்திற்கு வருபவர் தினகரன் பத்திகையில் நீண்டகாலம் பணிபுரிந்த தினகரன் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதன் அவர்களே யாவார்.

அவர் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவாறே பட்ட மேற்படிப்பை மேற்கொண்டார். 'இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி' என்ற பொருளில் ஆய்வு நூலைச் சமர்ப்பித்து முதுகலைமாணி பட்டம் பெற்றார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றியவர். இவரது பணிகளைப் பாராட்டி இலங்கை அரசு 'கலாசூரி' விருதினை வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுப் பின்னர், மேற்படிப்புக்காகவும் தொழில் காரணமாகவும் கொழும்பில் பல காலம் வாழ்ந்தார். 1955 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகச் சேர்ந்த இவர், ஆரம்பத்தில் பாராளுமன்ற நிருபராகப் பணியாற்றிப் பாராளுமன்ற நிகழ்வுகளை பத்திரிகை மூலம் திறம்பட வெளிக்கொணர்ந்தார். பின்னர் 1957 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகி 1961 ஆம் ஆண்டு முதல் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையின் தேசியமட்ட பத்திரிகை வரலாற்றில் 33 வருடங்கள் பிரதம ஆசிரியராக இருந்த பெருமை இவருக்கு உண்டு. இலங்கைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை பத்திரிகை சபை ஆகியவற்றில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

சிறந்த பத்திரிகையாளர் சேவைக்கான விருது, சமூக மாமதி, தமிழ்மணி ஆகிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட இவர், தமிழ் மக்களினால் 'செய்தி மன்னன்' எனவும் அழைக்கப்பட்டார்.அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றார்.

இவர் இலங்கை அரசின் அதிவிசேட விருதான கலாசூரி விருதினைப் பெற்றுள்ளார். சட்டத்துறையில் நுழைந்து சட்டத்தரணியாகவும், சட்டக்கல்லூரி பகுதிநேர விரிவுரையாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டுப் பணிபுரிந்தார். அச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. சகல இன மக்களின் நன்மதிப்பையும் பெற்ற பண்பாளராக விளங்கினார்.

மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதனை பற்றிக் குறிப்பிடுகையில், "அவர் என்றும் பெருந்தன்மையானவர், தன்னை விமர்சிப்பவர் ஆற்றலை மதித்து அவர்களின் படைப்புகளை பிரசுரித்து ஊக்குவிப்பவர்" என்று குறிப்பிட்டுள்ளார். அவரது மறைவின் போது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள், கலை இலக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் பலருட்பட ஏராளமான புத்திஜீவிகள் அஞ்சலி செலுத்தினர்.



அமரர் சிவகுருநாதனுடன் கட்டுரையாளர் ஐங்கரன் விக்னேஸ்வரா

நீண்ட காலம் பத்திரிகை உலகின் மதிப்புப் பெற்ற தலைமகனாக விளங்கிய சிவகுருநாதன் அவர்கள் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்திருப்பார்.

கலாசூரி சிவகுருநாதன் இந்து மதத்தைச் சார்ந்தவர் ஆயினும் இஸ்லாமிய சமயத்தையும், முஸ்லிம்களையும் என்றும் மதித்தார். 1955ஆம் ஆண்டு தினகரன் ஆசிரியர் பீடத்தில் நுழைந்து புதிய சிந்தனைகளைப் புகுத்தி தினகரனுக்கு புதிய மகுடம் சேர்த்தார். எழுத்துலகில் புதிய கோணத்தில் தினகரனை வழிநடத்தி வந்ததனால் 1960ஆம் ஆண்டு விஜேவர்தன விருதை பெற்றதுடன் தினகரன் பிரதம ஆசிரியர் கதிரையை அலங்கரித்தார். இந்தக் கால கட்டத்தில் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர் அணியை உருவாக்கினார்.

அன்னாரின் காலத்தில் எழுதிய எழுத்தாளர்கள் இன்னும் பிரகாசிக்கின்றனர். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதையும் பெற்றார். ஈழத்துப் பத்திரிகைகள் நவீன இலக்கியத்திற்கு களம் அமைத்துக் கொடுக்க ஆரம்பித்த பின்னர் பல புதிய படைப்பாளிகள் உருவானதுடன், கணிசமான இலக்கிய படைப்புகளும் தோற்றம் பெற்றன. தினகரன் இவ்விடயத்தில் அதீத அக்கறை கொண்டு ஆற்றிய பணி மகத்தானது. அன்றைய கால கட்டத்தில் அதிகம் பேர் வாசிக்கும் பத்திரிகையாக தினகரன் விளங்கியதும் ஒரு காரணமெனலாம். அதன் காரணமாக இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக இளம் படைப்பாளர்களின் இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பினை செய்தது. தினகரன் தனது இலக்கியப் பக்கங்களில் புதிய இளம் படைப்பாளிகளின் ஆக்கங்களை தேர்ந்தெடுத்து அவற்றை மெருகூட்டி வெளியிட்டது. தனது பணிக்காலத்தில் இரண்டு தலைமுறை எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்தவரென்ற வரலாற்றுப் பெருமையும் அவருக்கு உண்டு.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதில் மக்கள் மத்தியில் மீண்டும் தீவிர கரிசனை அவசியம்!

நாட்டில் மீண்டும் கொவிட் தொற்று வேகமாகப் பரவி வருவதாகவும், தொற்றாளர்களினதும், மரணங்களினதும் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளதாகவும் வெளிவரும் செய்திகள் மக்களை மீண்டும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. கொரோனா ஆபத்து ஏற்படுவதிலிருந்து எம்மையும், எமது குடும்பத்தினரையும், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எங்கள் ஒவ்வொருவருக்குமுள்ள தலையாய கடமையாகும்.

சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் தொற்றிலிருந்து நாங்கள் நிச்சயம் பாதுகாப்பும் பெற முடியும். இவ்விடயம் தொடர்பில் மீண்டும் அதீத கவனம் திரும்புவது காலத்தின் தேவையாக உள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் தொடர்ந்தும் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கான புதிய யுக்திகள், நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலத்தைப் போன்று. பகிரங்க ஒலி பெருக்கி அறிவித்தல்கள் விடுத்தல், துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள் விநியோகித்தல் போன்ற பணிகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், கொவிட் 19 பாதுகாப்புத் தொடர்பில் பொதுமக்களைக் கவரும் வகையிலான விழிப்புணர்வு வீடியோக்கள் வெளியிடப்பட்டு, வீதியோர விளம்பரங்கள். பதாதைகள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள் என்பன காட்சிப்படுத்தப்படுவதும் அவசியமாகும். இத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று அனர்த்த முகாமைத்துவக் குழுவினால், கொவிட் வைரஸ் தொற்று பரவல் கட்டுப்பாடு பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள், சுகாதார வழிகாட்டுதல்கள் அடங்கிய, சுமார் இரண்டரை நிமிடங்களடங்கிய விழிப்புணர்வுக் காணொளியொன்று ஏற்கனவே தயாரித்து வெளியிடப்பட்டது. அதனை நினைவுபடுத்துவது தற்பொழுது பொருத்தமானதாக இருக்கும்.

'நேசத்திற்குரிய என் தேசத்தவர்களே... என இந்த அறிவுறுத்தல் விளிக்கப்பட்டுள்ளது. உயிர்பறிக்கும் கொவிட் டெல்டா வைரஸ் எமது பிரதேசத்திலும் பரவியுள்ளது. உங்கள் உயிரை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்' போன்ற மகுட வாசகங்களுடன் ஆரம்பிக்கும் இக்காணொளிக்கு அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி ஜெஸ்ரின் ஜஸா அமல் சிறப்பாகக் குரல் கொடுத்திருந்தார்.

'சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது நடந்து கொள்வது கொலைக்குற்றத்திற்குச் சமனாகாதா? வீட்டைவிட்டு வெளியேறும் முன்னர் சற்று சிந்திக்க வேண்டாமா? வயதான பெற்றோர் எத்தனையோ பேரை இழந்து விட்டோம், சிறுவர்கள் குறித்து கவனம் செலுத்த மாட்டீர்களா? நம்மை கட்டுப்படுத்தி, தனிமைப்படுத்தி தொழிற்பட்டால் உயிர்கொல்லி கொரோனாவை வென்று விடலாம். அனைவரும் ஓரணியில் ஒன்றிணைந்து கொரோனாவை விரட்டுவோம்' என அக்காணொளியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இக்காணொளியை பெற்றோர் 'வட்ஸ் அப்' குழுமங்களுடாக பாடசாலை மாணவர்களின் பார்வைக்கு சேர்க்குமாறு அக்கரைப்பற்று முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் சகல பாடசாலைகளின் அதிபர்களையும் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



மேலும், அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று அனர்த்த முகாமைத்துவக் குழு என்பன பதாதைகள், சுவரொட்டிகளை வெளியிட்டிருந்தன. மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அஹமட் சகி தலைமையில் இதனை காட்சிப்படுத்தும் பணி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் உள்ளிட்ட முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா ஆபத்து நிலைமை ஏற்படுவதிலிருந்து எம்மையும், எமது குடும்பத்தினரையும், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எங்கள் ஒவ்வொருவருக்குமுள்ள தலையாய கடமையாகும். கோவிட் 19 தொற்று அற்ற நாட்டை கட்டியெழுப்ப பேதங்களின்றி நிறைவான ஒத்துழைப்பு நல்குவதும் அவசியம்.

**முகம்மட் றிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

## அக்குறணையில் வெள்ளத்தை கட்டுப்படுத்த 10 மில். நன்கொடை

(அக்குறணை குறூப் நிருபர்)

அக்குறணையில் அடிக்கடி ஏற்படும் ஆற்று வெள்ளத்தை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில், கண்டி மாவட்ட செயலாளரின் தலைமையிலான விசேட தொழில்நுட்பக் குழுவின் பிரேரணையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி, இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக அக்குறணை ஊடாக பாயும் பிங்கா ஓயாவின் வண்டல் மண் மற்றும் சகதிகளை அகற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இதற்காக யுஎஸ்ஏ எயிட்கோவினால், சுமார் 10 மில்லியன் நன்கொடையாக கிடைத்துள்ளது.




## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன் வாகனங்கள் நிறுத்தத் தடை

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களை தொடர்ந்தும் நீண்ட வரிசையில் நிறுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ரொசான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

நாடு பூராகவும் எரிபொருள் விநியோகத்தை சீராக விநியோகிக்கும் முகமாக எரிபொருள் அமைச்சினால் தேசிய ரீதியில் எரிபொருள் அட்டை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட வரிசையின்றி எரிபொருளை பெறக் கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வருவதற்கு முன்னதாகவே வாகனங்களை நிறுத்தி வரிசைப்படுத்தி நாட்கணக்கில் விடுவதன் மூலம் விபத்துக்குள் ஏற்பட்டு வருவதுடன், போக்குவரத்து அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும், வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வருகின்ற போது வாகனங்களை வரிசைப்படுத்தி ஓர், இரு மணித்தியாலங்களுக்குள் எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்துகின்றேன்.

## அதிகார பரவலாக்கம் சிறுபான்மையினருக்கு உரியது - சட்டத்தரணி அம்பிகா சிறிதரன்

சாவகச்சேரி விஷேட நிருபர்



இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் சிறுபான்மையின சமூகத்திற்கும் உரித்துடையது என வடக்குகிழக்கு ஒருங்கிணைப்புக் குழு நிறுவனத்தின் அங்கத்துவ அமைப்பு பிரதிநிதியான சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தெரிவித்துள்ளார். அரசியல் தீர்வினை வலியுறுத்தி சனிக்கிழமை நாவற்குழியில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; வடக்கு கிழக்கு மாகாண சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய குரல்களுக்கு செவிசாய்த்து நிரத்தரத் தீர்வொன்று வழங்க வேண்டும். சிறுபான்மையின சமூகங்களாகிய எமக்கு எமது ஆளுகைக்கு உட்பட்ட வடக்குகிழக்கு மாகாணங்களில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை எம்மிடமே வழங்க வேண்டும். உரிய முறையில் அதிகாரப் பரவலாக்கம், அதிகார கையளிப்பு இடம்பெற வேண்டும்.

## முல்லைத்தீவில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

ஐஸ் எனப்படும் போதைப்பொருள் பாவனை இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படும் நிலையில் இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

22 அகவையுடைய கள்ளப்பாடு தெற்கினைச் சேர்ந்த இளைஞன் 5 கிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் 21 அகவையுடைய உண்ணாப்பிலவு வடக்கினைச் சேர்ந்த இளைஞன் 4கிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். கைதுசெய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருட்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்கள். முல்லைத்தீவில் இளைஞர்கள் மத்தியில் ஐஸ் போதைப் பொருள் வியாபாரம் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

## திருமுறிகண்டி வசந்தநகர் பகுதி யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளார்

மாங்குளம் குறூப் நிருபர்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி வசந்தநகர் பகுதியில் யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

22 வயதுடைய குறித்த யுவதி காணாமல் போன போது சிவப்பு நிற சல்வார் அணிந்து சென்றிருக்கிறார். சிவகரன் ஜெயலக்சனா என்ற குறித்த யுவதி கடந்த 27.07.2022 முதல் காணாமல் போனதாக முறைப்பாடு செய்தும் இதுவரை யுவதியை காணவில்லை.

எனவே யுவதியை கண்டவர்கள் 0760777615, 0740961230 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## புளொட்டின் புதிய நிர்வாகம்



யாழ்.விசேட நிருபர்

புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச்சபை கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இணுவில் பகுதியிலுள்ள தனியார் மண்டபமொன்றில் சுந்தரம் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. அக்கட்சியின் தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் செயலாளராக நா.இரட்ணலிங்கமும் பொருளாளராக க.சிவநேசனும், ஊடகப் பிரிவின் தலைவராக பா.கஜதீபனும் சர்வதேச பேச்சாளராக செ.ஜெகநாதனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் பொதுச்சபைக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளில் இயங்குபவர்கள் உட்பட145 பேராளர்கள் வரை கலந்து கொண்டிருந்ததுடன் தீர்மானங்களும் எட்டப்பட்டன.




## சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் மூவர் பலி

நுவரெலியா தினகரன் நிருபர்



நுவரெலியா மாவட்டத்தில் 494 குடும்பங்களை சேர்ந்த 1853 பேர் வரை சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. 337 வீடுகள் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 பேர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 2 பாதுகாப்பு மையங்கள் செயற்பட்டு வருகின்றது. 5 குடும்பங்கள் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதில் 13 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர பாதிக்கப்பட்டவர்கள் 389 குடும்பங்களை சேர்ந்த 1397 பேர் தங்களுடைய உறவினர்களின் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இதே வேளை தொடர்ந்து கடுமையான காலநிலை நிலவி வருவதுடன் கடுமையான மழையும் தொடர்ந்து பெய்து வருகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் அம்பேகமுவ பகுதியே அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. குறிப்பாக பல முக்கிய பாதைகள் தொடர்ச்சியாக மண் சரிவிற்கு உட்பட்டு வருவதால் அந்த பாதைகளை பாதை அபிவிருத்தி அதிகார சபை உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் இணைந்த உடனுக்கு உடன் பாதைகளை ஒழுங்கமைத்தாலும் போக்குவரத்து தடைபட்ட வண்ணமே உள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்தாலும் எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சையை முன்னிட்டு ஒரு சில பாடசாலைகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் வகுப்புகளை முன்னெடுத்து வருகின்றனர்.ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்கு வந்து செல்வதில் பல்வேறு போக்குவரத்து சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

அதே நேரம் நேற்று முன்தினம் 4ஆம் திகதி கொத்மலை பூண்டுலோயா பகுதியில் அரச பேருந்த ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட 13 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்திற்கு உள்ளான பேருந்தில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் பாரிய சிக்கல் ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் தொடர்ந்தும் காலநிலை மிகவும் மோசமடைந்துள்ளதே. தொடர்ந்தும் பல பிரதான பாதைகளில் இருபகுதிகளிலும் மண்சரிவு, வீதிகள் தாழிறக்கம், மரம் முறிந்து விழுகின்ற சம்பவங்கள் என்பன தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நீர் நிலைகளிலும் நீர் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் அனர்த்தத்தால் பாதிக்கப்படுகின்றவர்களின் நிலைமை இன்னும் அதிகரிக்கலாம் என நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ முகாமையாளர் அலககோன் தெரிவிக்கின்றார்.

## வீதி தாழ் இறங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளதாக பயணிகள் புகார்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியில் 5 ம் கட்டை பகுதியில் வீதி தாழ் இறங்கியுள்ளது. அதே போல் நோட்டன் கினிகத்தேன பிரதான வீதியில் அட்லிஸ் பகுதிகளில் தாழ் இறங்கியுள்ளது. இதனால் அவ்வீதி ஊடாக வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் அவிசாவளை டிப்போ பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவிகள் பயணிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

## எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரிப்பு

( ஹாலிஎல விசேட நிருபர் )

நாட்டில் தற்போது மாறிவரும் காலநிலை நிலைமைகளின் கீழ் எலிக் காய்ச்சல் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்திற்குப் பின்னர் இரண்டு மாதங்களுக்கு மிகவும் வறண்ட காலநிலை நிலவுகின்ற போதிலும், நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையுடன் எலிக்காய்ச்சல் அபாயம் அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் சமூக சுகாதார வைத்திய நிபுணர் திருமதி துஷானி தம்பரேணு கூறுகிறார்.

எலிக்காய்ச்சல் அல்லது லெப்டோஸ்பயிரோசிஸ் என்பது எலிகள் மற்றும் கால்நடைகள் மற்றும் எருமைகள் போன்ற விலங்குகளால் பரவும் காய்ச்சல் நோயாகும். இந்த நோய் கொறித்துண்ணிகள், பண்ணை விலங்குகள், நாய்கள் மற்றும் பாலூட்டிகளிடமிருந்து கூட பரவுகிறது. இந்த நோய் கிணற்றுக் காய்ச்சல், எலி காய்ச்சல் அல்லது சேற்றுக் காய்ச்சல் என்றும் அழைக்கப்படுகிறது.

உங்கள் பிள்ளையின்
வெளிநாட்டுக் கல்விக்கான
கடவுச்சீட்டு




வெளிநாட்டு நாணயத்தில் சேமித்திடுங்கள்

ETHERA ISURA Doodaru
PERSONAL FOREIGN CURRENCY ACCOUNT (PFCA)

- 0.25% மேலதிக வட்டி
- கல்வி மற்றும் மருத்துவ தேவைக்கான பணப் பரிமாற்றத்திற்குத் தரகு பணம் இல்லை
- சிறப்பு உடல்நலக் காப்புறுதி மற்றும் விபத்துக் காப்புறுதி
- கல்விச் சாதனைகளுக்குச் சிறப்புப் பணப் பரிசுகள்
  – லண்டன் அல்லது இலங்கை உயர்தர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கு தலா ரூ. 10,000 பணப்பரிசு (அதிகபட்சம் 3 பாடங்கள் வரை)
  – லண்டன் அல்லது இலங்கை சாதாரணதர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கு தலா ரூ. 5,000 பணப் பரிசு (அதிகபட்சம் 5 பாடங்கள் வரை)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: +94 70 1750 294

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி,
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வருமானத்தினால் நிதியிடப்படுகிறது**

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்**

**ஒரு வருட காலத்திற்கு அதிவேக வீதியின் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு வாகனத்தை ஏற்றிச் செல்லும் 06 வாகனங்களை (VEHICLE CARRIER) வாடகைக்கமர்த்துதல் (2022/2023)**

1. RDA/EOM&M/PRC/2022/TRA/06ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்திற்காக தகுதி மற்றும் முழுமையான தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன. சகல விலைமனுக்களுடனும் 40,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 038-2289122 தொலைநகல்: 038-2289560) என்பதுடன் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-08-08ஆம் திகதியிலிருந்து 2022-08-22ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.30 மணி வரையும் ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபா + **120.00 (**பெசேவ) தொகையைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு (EMO&M) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
4. விலைமனுக்கள் 2022.08.22ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும்படி மேற்படி முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைமனுக்கள் 2022-11-21ஆம் திகதி வரையும் மற்றும் விலைமனு பிணை முறி 2022.12.19ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு,
மே/பா பதில் பணிப்பாளர் **(EMO&M)** பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம.

### சீதாவாக பிரதேச சபை
### ஹங்வெல்ல

## விலைமனு அழைத்தல்

1. சீதாவக பிரதேச சபை சார்பாக பெறுகைக் குழுத்தலைவரினால் இப்பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹங்வெல்ல நகரின் பழைய வார சந்தைக் கட்டிடத்தைக் கழற்றி சிதைவுகளை அகற்றி பூமியை சுத்தப்படுத்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையினடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
3. கட்டிடத்தைக் கழற்றி மீள்பாவனைக்கு ஏற்ற பதார்த்தங்களிற்கான ஆகக் குறைந்த மதிப்பீடு/விலைமனுத் தொகை ரூபா 1,131,900.00 ஆகும்.
4. உச்ச விலைமனுவிற்கு வழங்கப்படுவதுடன் உங்கள் விலைமனு ஏற்றுக் கொள்ளப்படின் குறித்த விலைமனுத்தொகையை சபையில் காசாகச் செலுத்தி கட்டிடத்தை அகற்றுதல் வேண்டும்.
5. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், வார வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் நேரில் களப்பரிசீலனையை மேற்கொள்ளலாமென்பதுடன் தொலைபேசி இல. 070-3200708ஐ அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சீதாவக பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்து காசாக மீளளிக்கப்படாத ரூபா 100/- இற்கான (விண்ணப்பக்கட்டணம்) ஐச் செலுத்தி 2022.08.22 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரையான காலப்பிரிவில் முழுமையான விலைமனுப்படிவத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
7. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக்குறிப்பிட்டு தனித்தனி இரண்டு உறைகளில் உள்ளிட்டு அவற்றை ஒரு தபாலுறையில் உள்ளிட்டு மற்றும் தபாலுறைகள் மூன்றினதும் இடது பக்க மேல் மூலையில் 'ஹங்வெல்ல வாரச்சந்தைக் கட்டிடத்தை கழற்றி அகற்றிக் கொள்ளல்' எனக்குறிப்பிட்டு, முத்திரையிட்டு 2022.08.23 அன்று பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், சீதவாக பிரதேச சபை ஹங்வெல்ல' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது சீதாவக பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும்.
8. விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் முடிவுற்றதும் உடனடியாக சீதாவக பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
9. பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் செய்யும் அதிகாரம் சீதாவக பிரதேச சபைக்கு உரித்தாகும்.

**ஜீ. ஜயந்த ரோஹண,**
**தலைவர்,**
**சீதாவக பிரதேச சபை,**
**ஹங்வெல்ல.**
2022.08.04

## பாதுகாப்பு அமைச்சு

# விலைமனுக் கோரல்

## சுஹுருபாய கட்டிடத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் – 2022/2023

சுகாதார அமைச்சு சார்பாக அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரினால் சுஹுருபாய கட்டிடத்திற்கு 2022.09.01 முதல் 2023.08.31 வரையான ஒரு வருடகாலத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் சுகாதாரப்பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகைக்காக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள 20 மாடிகளுடன் கூடிய பிரதான கட்டிடங்கள் மற்றும் ஏனைய இரண்டு கட்டிடங்களிற்கான சுத்திகரிப்புச் சேவைகள் மற்றும் சுகாதாரப்பாதுகாப்புச் சேவைகளிற்காக அமைவிடத்திற்கு உசிதமான பிரேரணைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது சுற்றாடலுக்கு இசைவான கருத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கட்டிடமொன்றாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாடிகளிலுள்ள மேசைகள் கதிரைகள் யன்னல்கள் மாடிப்படிகள், மாடிப்படி கைப்பிடிகள், சுவர்கள், மின் விசிறிகள் போன்றவை தினசரி சுத்திகரிக்கப்படல் வேண்டும். சுத்திகரிக்கப்பட வேண்டிய இடங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் இணைப்பு (அ) முதல் இணைப்பு (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் 2022.08.08 முதல் விலைமனுதாரர்கள் குறித்த வளாகத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இடமளிக்கப்படும். இதற்காக கீழ்க்காணப்படும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் குறித்த அலுவலர்களை தொடர்பு படுத்திக் கொள்ளலாம்.

கெப்டன் செனால் பாதுகாப்பு பொறியியல் சேவைகள் கிளை சுஹுருபாய - 071 3080931

எனவே இதற்காக கீழ்க்காணப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. தனி நபர் வியாபாரமொன்று கூட்டு வியாபாரம் அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (ISO தரச் சான்றிதழ் பெற்றுள்ள நிறுவனங்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்).
II. அரச சட்டத்திட்டங்களிற்கு அமைவாக சேவைக் கொடுப்பனவு வரி செலுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
III. 03 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக குறித்த சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
IV. கடந்த 03 ஆண்டுகாலமாக சேவை வழங்கும் நிறுவனங்களின் பட்டியலொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 05 நட்சத்திர சுப்பர் ஹோட்டல்களில் ஏற்கனவே சேவை வழங்கும் நிறுவனங்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதனால் அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).
V. கொவிட் 19 வைரசைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் இருத்தல் வேண்டும்.
VI. சுத்திகரிப்பு வேலைகளிற்குப் பயன்படுத்தப்படும் இயந்திராதிகள், இக்கட்டிடத்திற்கு உசிதமான நவீன தொழில்நுட்பங்களுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.
VII. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022.10.30 வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.
VIII. ஒப்பந்தக்காலத்தில் எக்காரணம் கொண்டும் விலைமனுக்களில் மாற்றங்களை மேற் கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்பதனால் அதற்கேற்றவாறு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
IX. பயிற்றப்பட்ட பணிக்குழாமினரை மாத்திரம் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.
X. ஊழியர்களுக்கான 2021ஆம் ஆண்டு உட்பட சுமார் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) மற்றும் ஊழியர் சேம நல நிதியம் (E.P.F.) போன்றவற்றிற்குப் பங்களிப்புச் செய்துள்ள ஊழியர்களை பணியிலமர்த்துவதற்கு இயலுமை இருத்தல் வேண்டும்.
XI. பணிக்குழுவிற்கு நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
XII. அவசர சேவைத் தேவைப்பாடுகளிற்கான சுத்திகரிப்புகளிற்காக ஊழியர்களை ஈடுபடுத்துவதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.
XIII. கட்டிடங்களின் அமைப்புக்கேற்ற வகையில் ஆண் ஊழியர்களும் தேவையென்பதனால் அவர்களையும் சேவையில் ஈடபடுத்தும் இயலுமான இருத்தல் வேண்டும்.
XIV. கட்டிடத்தில் சுத்திகரிப்புப் பணிகளிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கையானது 25ஆக இருத்தல் வேண்டும்.
XV. சுத்திகரிப்புச் சேவைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகள் போன்ற இரண்டையும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் சேவை வழங்கும் ஒவ்வொரு நாளும் ஆண் சுகாதாரப்பாதுகாப்பு தொழிலாளி ஒருவர் ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் அடங்கியிருத்தல் வேண்டும்.

2022.08.08 அன்று மு.ப. 9.00 முதல் 2022.08.29 அன்று 12.00 மணி வரை (வார வேலை நாட்களில்) ரூபா 4000 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை பாதுகாப்பு அமைச்சின் கொடுப்பனவுப் பிரிவில் செலுத்தி கணக்காளர் (வழங்கல்) இடம் கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு அதற்கான விபரங்கள் மற்றும் வளாகத்தைப் பரிசீலிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களுடன் அமைச்சின் செயலாளரின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் ரூபா 150,000.00 இற்கான விலைமனுப்பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைமனுப் பிணையமானது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப் பெற்றுள்ள முன்னணி வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிபந்தனைகளற்ற 2022.12.13 வரை செல்லுபடியாகும் வங்கி வரைவு ஒன்றாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் கேள்விப் பெறுமானத்தின் 10% இற்கான நிபந்தனைகளற்ற செயற்பாட்டு வங்கிப் பிணையமொன்றை வழங்குவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் இரண்டு பிரதிகளாக (மூலப்பிரதி/நகல் பிரதி) 2022.08.30 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் 'பிரதான நிதி அலுவலர் I கணக்குப் பிரிவு, இரண்டாம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் மேற்கொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுத்திகரிப்புச் சேவையை வழங்கலிற்கான விலைமனுக் கோரல் 2022/23 சுஹுருபாய' எனக் குறிப்பிடல் வேண்டும்.

விலைமனுத் திறக்கப்படும் தினத்தில் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதி நிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். விலைமனுத் திறக்கப்படுவதற்கு குறைந்தபட்சம் 03 தினங்களிற்கு முன்னர் விலைமனுத்திறக்கும் நிகழ்வில் கலந்து கொள்பவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்/கடவுச்சீட்டு இலக்கம் போன்றவை விலை மனுதாரர்களினால் பிரதான நிதி அலுவலர் I கணக்குப்பிரிவு, இரண்டாம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே இற்கு எழுத்துருவில் அல்லது மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்படல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி modsupplysl@gmail.com விலைமனுத் திறத்தல் 2022.08.30 அன்று மு.ப. 10.00 இற்கு பத்தரமுல்ல பாதுகாப்பு அமைச்சிலுள்ள நிதிப்பிரிவில் (02ஆம் மாடி) கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தில் நடைபெறும்.

**பாதுகாப்புச் செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

திகதி: 2022.08.08

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் பொலன்னறுவை

01. பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் பின்வரும் நிர்மாணங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி முறையில் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரும் முறையில் கேள்விகள் கோரப்பட்டாலும் வடமத்திய மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்து கொண்டுள்ள கேள்விதாரர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
02. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறும் வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் கட்டிடங்கள் நிர்மாணங்களின் பொருட்டு பின்வரும் CIDA பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
03. இது தொடர்பில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பொலன்னறுவை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கணக்காளரிடம் (027 2223259) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இந்த நிறுவனத்திற்கு வருகை தந்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் 2022-08-26ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் இந்த நிறுவனத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை தொடர்பான விபரங்கள் | நிதி வளம் | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைச் செலவு (ரூபா) | தேவையான ஆகக் குறைந்த ICTAD தரம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ஒப்பந்தக் காலம் | கேள்வி ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஹிங்குரக்கொட வைத்தியசாலையின் சிறிய திருத்தவேலைகள் (Minor Improvement of Higurakgoda Hospital) | PSSP | 4.1 மில்லியன் | C7, C8 | ரூபா 41,000.00 | 90 நாட்கள் | ரூபா 2,500.00 |
| 2 | ஜயந்திபுர வைத்தியசாலையில் குடம்பிகள் இனப்பெருக்க தாங்கியை நிர்மாணித்தல் (Construction of larvivorous breeding tank at all division (DH Jayanthipura) | PSSP | 1.4 மில்லியன் | C8, C9 | ரூபா 14,00.00 | 60 நாட்கள் | ரூபா 1,500.00 |
| 3 | வெலிகந்த ஆதார வைத்தியசாலையை மேம்படுத்துதல் (Improvement of BH Welikanda) | PSSP | 6.6 மில்லியன் | C6, C7 | ரூபா 66,000.00 | 90 நாட்கள் | ரூபா 2,500.00 |
| 4 | பாலியல் நோய் சிகிச்சை நிலையத்தின் திருத்தவேலைகள் (Improvement of STD clinic at RDHS) | PSSP | 1.7 மில்லியன் | C8, C9 | ரூபா 17,000.00 | 60 நாட்கள் | ரூபா 1500.00 |
| 5 | அரலகன்வில வைத்தியசாலை சடல அறையின் திருத்தவேலைகள் (Renovation of Mortuary Aralaganwila Hospital) | PSSP | 6.6 மில்லியன் | C6, C7 | ரூபா 66,000.00 | 90 நாட்கள் | ரூபா 2,500.00 |
| 6 | புலஸ்திகம வைத்தியசாலையில் ஆண்கள் வார்டின் திருத்தவேலைகள் (Renovation of Male ward Pulasthigama Hospital) | PSSP | 7.4 மில்லியன் | C6, C7 | ரூபா 75,000.00 | 120 நாட்கள் | ரூபா 3,000.00 |
| 7 | மன்னம்பிட்டி வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் நிறுத்துமிடத்தை நிர்மாணித்தல் (Construction Of Ambulance garage at Manampitiya Hospital) | PSSP | 5.4 மில்லியன் | C6, C7 | ரூபா 54,000.00 | 90 நாட்கள் | ரூபா 2,500.00 |
| 8 | ஹிங்குரக்கொட ஆதார வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை மேம்படுத்துதல் (Improvement of drug store in Higurakgoda Base Hospital) | PSSP | 2.9 மில்லியன் | C7, C8 | ரூபா 25,000.00 | 90 நாட்கள் | ரூபா 2,000.00 |

05. நகல் பிரதிகளுடனான கேள்விப் படிவங்களை 2022-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பொலன்னறுவை எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அன்றைய தினமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகம் தந்துள்ள கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
06. அனைத்து கேள்விப் படிவங்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்குச் சமமான பணத்தை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணை முறியொன்று அல்லது குறித்த பிணை வைப்பை திணைக்களத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பொலன்னறுவை - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு இரு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
08. இந்தப் பெறுகை தொடர்பில் பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**பொலன்னறுவை.**

# பெறுகை அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு (IFB)

## பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் (GEMP)

## மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

## தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. வடமத்திய மாகாணத்தின், மாகாண கல்வித் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால், கீழ்க்காணும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுடைய மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல | ஒப்பந்த திகதி | உருப்படியின் பெயர் | அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | NCP/ED/ACC/PRO/02/ GEMP/NCB/01/2022 | Laptop Computers | 68 | 200,000.00 | 5,000.00 |
| 02 | NCP/ED/ACC/PRO/02/ GEMP/NCB/02/2022 | Laptop Computers | 28 | 86,000.00 | 3,500.00 |
| 04 | NCP/ED/ACC/PRO/02/ GEMP/NCB/03/2022 | Smart Boards | 40 | 240,000.00 | 5,000.00 |
| | | 1200VA UPS | 40 | | |
| | NCP/ED/ACC/PRO/02/ GEMP/NCB/04/2022 | Multimedia Projectors | 17 | 34,000.00 | 3,500.00 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறையின் ஊடாக கேள்வி கோரல் நடத்தப்படும்.
03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில், இடம்பெறாது இருப்பதுடன் சட்டரீதியான அதிகாரம் செலுத்துபவரால் விநியோகிக்கப்பட்ட குறித்த துறையில் செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு தேவைப்படும் மேலதிக விபரங்கள், வடமத்திய மாகாணத்தின், மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் (தொலைபேசி 025-2222432) இடமிருந்து அலுவலக நேரங்களில் (மு.ப.09.00 முதல் பி.ப.03.00 இற்கு இடையில்) 2022 ஓகஸ்ட், 08 ஓகஸ்ட் 29 வரை, கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம், தகைமைகள் மற்றும் ஏனைய குறித்த நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
06. மீளளிக்கப்படாத கட்டணங்களை செலுத்தி மற்றும் அநுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் - மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை 2022.08.29ம் திகதி பி.ப.3.00 வரை கொள்வனவு செய்யலாம்.
07. கேள்வியுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு கேள்விப்பிணை இருப்பதுடன் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப்பிணையொன்றாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அதனை காசாகவும் செலுத்தலாம். குறித்த வங்கிப்பிணை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் தினம்வரை செல்லுபடியாவதுடன் நாட்டிற்குள் மாற்றிக் கொள்ளக்கூடியாத இருத்தல் வேண்டும்.
08. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என இரு பிரதிகளுடன் தயாரிக்கப்படுவதுடன், அப்பிரதிகள் இரண்டையும் வேறு வேறாக பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் முத்திரை இடப்பட்ட தனி உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்" என்றும் மற்றும் ஒப்பந்த இலக்கத்தையும் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி 2022 ஓகஸ்ட் 30 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி குறித்த நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறத்தல் ஆரம்பமாவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
10. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது சகலதையும் அல்லது ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு முன்பு எந்த வேளையிலும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன், அதன் காரணமாக கேள்விதாரர்/கேள்விதாரர்களுக்கு எந்த இணக்கப்பாடும் அல்லது பொறுப்பும் இல்லை என்பதுடன், அவ்வாறு தீர்மானம் எடுப்பதற்கு காரணமான விடயங்கள் சம்பந்தமாக தெரிவிப்பதற்கும் இணக்கப்பாடு இல்லை.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்**
**அநுராதபுரம்.**

# பெறுகை அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபை

பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுடன் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.08.31 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலை பெறுமதி (ரூ.மி.) (வெட் இன்றி) | கட்டிட நிர்மாணத் துறையின் தேவைப்படும் CIDA தரம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணைத் தொகை (காசாக செலுத்துவ தாயின்) (ரூ,) | நிர்மாண கால எல்லை (நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | BWMC/4/5/ 2022/01 | பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான நுகசெவன கடைத் தொகுதியின் நிர்மாணம் (கட்டம் 3) | 26.36 | C5 & C5 | 132,000.00 | 180 | 12,500.00 |

02. **பெறுகை முறை**

தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் ஊடாக கேள்விகள் கோரப்படுவதுடன் இக் கைத்தொழிலின் மதிப்பீட்டு செலவு ரூ. 50 மில்லியன்னுக்கு மேற்படாது இருப்பதால் நிதி அமைச்சு சுற்றுநிருப இல. 4/2016 (iii) இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களின் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுத் தரத்தின் முன்னுரிமை கேள்வி மதிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்படும்.

03. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் சீடா (CIDA) பதிவுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாத வெற்றிகரமான தகைமை கொண்ட கேள்விதாரர்கள் மாத்திரம் கேள்விகள் வழங்குவதற்காக தகைமை பெறுவர்.
04. கேள்வி மதிப்பீட்டின் போது நிதி அமைச்சு சுற்றுசிருப இல. 3/2020(i) இன் பிரகாரம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விநியோகிக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்கு அமைவாக மதிப்பீட்டு விடயங்கள் இடம் பெறுவதுடன் கீழ்க்காணும் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும். தேவைப்படும் தகைமைகளைக் பூர்த்தி செய்யாதிருத்தல் கேள்வி நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாகும்.
    i. கடந்த ஐந்து ஆண்டுகளில் வேலைப் பெறுமதியில் 80% அல்லது அதற்கு சமமான ஒரு கைத்தொழிலை நிறைவேற்றியுள்ள அனுபவம்
    ii. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்படி நிர்மாண சிவில் வேலைகளுக்கு சமமாக நடத்திச் செல்லப்பட்ட சாதாரண செலவுகள்
    iii. நிதி தகைமை
    iv. தற்போது நிறைவேற்றுகின்ற வேலைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்
05. 1987 இல. 03 பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்து குறித்த பதிவுச் சான்றிதழை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து பெறுகை மதிரிகளின் முழுமையான ஆங்கில மொழியிலான பிரதியொன்றை 2022.08.08 முதல் 2022.08.30 வரை அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை பண்டாரவளை மாநகர சபைக்கு செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ள முடிவதுடன் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. சகல கேள்வியுடனும் கேள்விப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். கேள்விப் பிணையை காசாக செலுத்துவதாயின் அது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமாக வேண்டியதுடன் கேள்விப் பிணைக்காக பிணை முறியொன்றை சமர்ப்பிப்பதாயின் ரூ. 264,000.00 பெறுமதியுடைய உடன்பாட்டு மாதிரிக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட வங்கிப் பிணை முறியொன்றை சமர்ப்பிக்கலாம். இப் பிணை முறி கேள்விப் பத்திரத்தின் 9ஆம் பந்தியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உடன்பாட்டு மாதிரிக்கு அமைவாக 2022.12.31ம் திகதி வரை செல்லுபடியாகும். நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தப்படும் பிணைமுறியாக இருத்தல் வேண்டும.
08. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் குறித்த பெறுகைக் குழுவிற்கு 2022.08.31 பி.ப. 2.00 இற்கு முன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்விப் பத்திரங்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறு வேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிட்டு தலைவர், பெறுகைக் குழு, பண்டார வளை மாநகர சபை அலுவலகம், பூங்கா வீதி, பண்டாரவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
09. நகல் பிதி, மூலப் பிரதியின் சகல பிரதிகளினதும் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும்.
10. குறித்த மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு சொந்தமான 057-2222275 தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
11. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் 2022.11.31ம் திகதி வரையானதாக இருத்தல் வேண்டும்.
12. 2022.08.31 பி.ப. 2.00 இற்கு பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் கேள்விகள், திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
13. கேள்விகோரல் சம்பந்தமான கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre Bid meeting) 2022.08.17 பி.ப. 2.00 இற்கு பண்டாரவளை மாநகர சபை கூட்ட மண்டபத்தில் இடம் பெறுவதுடன் அங்கு எதிர்பார்க்கும் கேள்விதாரர்களுக்கு திட்ட தேவைப்பாடு சம்பந்தமாக தெளிவுபடுத்தலை கோரலாம். மேலும் தேவைப்படின் வேலைத் தள விஜயம் ஒன்றையும் ஏற்பாடு செய்யலாம்.
14. கிடைக்கப் பெற்றுள்ள கேள்விகளில் தகைமையான கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது சகலதையும் நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியதுடன் பெறுகைக் குழுவின் மற்றும் மகா சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**பண்டாரவளை மாநகர சபை,**
**பூங்கா வீதி, பண்டாரவளை.**
**தொ.பே. இல. 057-2222275/ பெக்ஸ் இலக்கம்: 057-2222875**

திகதி: 2022.08.03

# ஸ்குவாஷ் பிளேட் கிண்ணம்: இலங்கை இறுதிக்குத் தகுதி



இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஸ்குவாஷில் பிளேட் கிண்ண அரையிறுதிப் போட்டியில்விளையாடிய இலங்கை கலப்பு இரட்டையர் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

கயானாவின் பங் ஏ பெட் மெரி மற்றும் வில்ட்ஷையர் சொமரி ஆகியோரை கடந்த சனிக்கிழமை எதிர்த்தாடிய சினாலி சந்திமா மற்றும் வகீல் ஷமீல் ஆகியோர் 2–0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றனர். முதல் செட்டை 11–7 என கைப்பற்றிய இவர்கள், இரண்டாவது செட்டை 11–6 என கைப்பற்றினர். இவர்கள் பிளேட் கிண்ண இறுதிப்போட்டியில் கயானாவின் அஷ்லி கஹ்லீல் மற்றும் ஜேசன் கஹ்லீல் ஆகியோரை எதிர்கொள்ளவுள்ளனர். இதேவேளை பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடைபெற்ற பெண்கள் இரட்டையர் பிரிவு பிளேட் கிண்ண காலிறுதிப்போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தது. சினாலி சந்திமா மற்றும் யெஹானி குருப்பு ஆகியோர் முதல் செட்டை 11–10 என கைப்பற்றிய நிலையில், அடுத்த இரண்டு செட்களையும் 05–11 மற்றும் 09–11 என இழந்து 1–2 என்ற செட்கள் கணக்கில் தோல்வியடைந்தனர்.

# 200 மீற்றரிலும் தொம்சன் தங்கம்



ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை எலைன் தொம்சன் ஹெராஹ் ஒலிம்பிக் போன்றே பொதுநலவாயப் போட்டியிலும் இரட்டை தங்கப் பதக்கங்களை வென்றார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்றதன் மூலமே அவர் மீண்டும் இந்த சாதனையை செய்து காட்டியுள்ளார். கடந்த புதன்கிழமை நடந்த 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 28 வயதான தொம்சன் தங்கம் வென்றிருந்தார்.

இதில் அவர் 200 மீற்றர் தூரத்தை 20.02 விநாடிகளில் பூர்த்தி செய்து முதலிடத்தைப் பிடித்தார். இது புதிய போட்டிச் சாதனையாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. 22.51 விநாடிகளில் போட்டித் தூரத்தை முடித்த நைஜீரியாவின் பேவர் ஒபிலி வெள்ளிப் பதக்கத்தையும் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற கிறிஸ்டின் ம்போமா 22.80 விநாடிகளில் போட்டித் தூரத்தை முடித்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.

பொதுநலவாய போட்டிகளில் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கம் வென்ற ஐந்தாவது பெண்ணாகவும் தொம்சன் பதிவானார். இதில் 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் அவர் பங்கேற்கும் நிலையில் மூன்றாவது தங்கத்தை வெல்லும் வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பெட்மின்டன் அணி காலிறுதி போட்டியில் தோல்வி



பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் பெட்மின்டன் ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதிப்போட்டியில் 0–2 என மலேசிய அணியிடம் தோல்வியடைந்த இலங்கை அணி அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

சச்சின் டயஸ் மற்றும் புவனேக குணதிலக ஆகியோர் மலேசிய அணியிடம் 19–21 மற்றும் 12–21 என தோல்வியை சந்தித்தனர். இதன் மூலம் இலங்கை அணியின் பதக்கக் கனவு தகர்க்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மற்றுமொரு முக்கியமான காலிறுதிப்போட்டியில் தோல்வியடைந்த இலங்கை கலப்பு இரட்டையர் பிரிவின் பெட்மிண்டன் அணி அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது.

இங்கிலாந்தின் மார்கஸ் எரிஸ் மற்றும் லோரன் ஸ்மித்தை எதிர்கொண்ட சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹெந்தேவ ஆகியோர் 0–2 என்ற நேர் செட்கள் கணக்கில் தோல்வியடைந்தனர்.

இவர்கள் முதல் செட்டை 12–21 என இலகுவாக இழந்திருந்தாலும், இரண்டாவது செட்டில் சிறந்த போட்டியை கொடுத்து துரதிஷ்டவசமாக 19–21 என்ற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைந்தனர்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..............................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..............................
வாக்களித்தவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 13-08-2022 இல. 20




## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து உக்கிர தாக்குதல்: உயிரிழப்பு 32 ஆக உயர்வு

## மற்றொரு போர் மூளும் அபாயம்



காசா மீது இஸ்ரேல் இரண்டாவது நாளாக நடத்திய வான் தாக்குதல்களில் பலஸ்தீன போராட்டக் குழு ஒன்றின் மூத்த தலைவர் மற்றும் பல சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு காசாவின் தமது தளபதியான காலித் மன்சூர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதை இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு நேற்று உறுதி செய்தது. கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காசா மீது இஸ்ரேல் தாக்குதல்களை ஆரம்பித்தது தொடக்கம் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பைச் சேர்ந்த இரு தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்லாமிய ஜிஹாத் மீதான தமது நடவடிக்கை ஒரு வாரம் நீடிக்கக் கூடும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது. காசா மீதான தாக்குதல்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அகதி முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் உடனடி அச்சுறுத்தல் காரணமாகவே இந்தத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

ஜபலியா அகதி முகாமுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது நான்கு சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசாவில் ஆட்சியில் இருக்கும் ஹமாஸ் தெரிவித்துள்ளது. இந்த உயிரிழப்புகளுக்கு அது இஸ்ரேல் மீது குற்றம்சாட்டியபோதும், இஸ்லாமிய ஜிஹாதின் தோல்வி அடைந்த ரொக்கெட் வெடித்தே இந்த உயிரிழப்புகள் நேர்ந்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்டிருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது. மொத்தம் 32 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் குறைந்தது 250 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்கு பதில் நடவடிக்கையாக இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் 400க்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகளை வீசியுள்ளனர். இதில் பெரும்பாலான ரொக்கெட்டுகள் இடைமறிக்கப்பட்டிருப்பதோடு, இஸ்ரேலிய தரப்பில் காயங்கள் பதிவாகியுள்ளன.

இதில் நேற்று காசாவில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டு ஒன்று ஜெரூசலத்தை அடைந்துள்ளது. 2021 மோதலுக்குப் பின்னர் இத்தனை தூர ரொக்கெட் குண்டு வீசப்பட்டது இது முதல்முறையாகும்.

இந்த வன்முறைகள் காசா மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் மற்றொரு போர் பற்றிய அச்சத்தை அதிகரித்துள்ளது. 15 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு மாத கால மோதலில் 260க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காசாவின் வலுவான போராட்டக் குழு ஒன்றான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு ஈரானின் ஆதரவோடு இயங்குவதோடு அதன் தலைமையகம் சிரிய தலைநகர் டமஸ்கஸில் உள்ளது. இஸ்ரேல் மீதான ரொக்கெட் வீச்சு மற்றும் பல தாக்குதல்களுக்கு இந்தப் போராட்டக் குழு பொறுப்பாக உள்ளது.

# எருமையை விடக் குறைந்த விலைக்கு சிங்கங்கள் ஏலம்



பாகிஸ்தானின் லாகூர் சபாரி மிருகக்காட்சி சாலையில் உள்ள 12 சிங்கங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

அதன் மூலம் இடப் பற்றாக் குறைக்குத் தீர்வு காண்பதோடு, இறைச்சி வாங்கும் செலவும் குறையும் என்று அந்த மிருகக்காட்சி சாலையின் பிரதிப் பணிப்பாளர் தன்வீர் அஹ்மட் ஜஞ்சுவா தெரிவித்தார்.

ஆனால் சிங்கங்களுக்கு முறையான பராமரிப்பும் உணவும் அளிக்கக்கூடியவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள முடியும். அங்கு தற்போது 29 சிங்கங்கள் உள்ளன. அவற்றில் 2 வயதிலிருந்து 5 வயதுக்கு இடைப்பட்ட 12 சிங்கங்கள் வரும் வியாழக்கிழமை (ஓகஸ்ட் 11) ஏலத்தில் விடப்படும். இதில் சிங்கம் ஒன்றின் குறைந்தபட்ச ஏலத் தொகையாக 1.5 இலட்சம் ரூபா பாகிஸ்தான் நாணயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஒரு எருமை மாட்டின் விலையை விடவும் இரண்டு மடங்கு குறைவாகும்.

# கார்பன் சந்தைக்கு இந்தியா திட்டம்



தூய்மையான எரிபொருள் மாற்றத்திற்கான ஓர் அங்கமாக வலுசக்தி, உருக்கு மற்றும் சிமந்து தொழில்துறைகளில் பிரதான உமிழ்வாளர்களுக்கான கார்பன் வர்த்தகச் சந்தை ஒன்றை ஆரம்பிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி கொண்டாடப்படும் சுதந்திர தினத்தில் இந்தத் தளம் பற்றிய அறிவிப்பை பிரதமர் நரேந்திர மோடி வெளியிடுவார் என்று இது பற்றி தெரிந்த வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

# வழக்கத்தை விட வேகமாக சுற்றும் பூமி



பூமி வழக்கத்தை விட வேகமாகச் சுற்றுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அண்மையில் மிகக் குறுகிய நாளும் பதிவாகியுள்ளது. கடந்த ஜூன் 29ஆம் திகதி சராசரி தினத்தைவிட 1.59 மில்லியன் நாடி குறைவாய் இருந்ததாக சி.பி.எஸ் செய்தி நிறுவனம் கூறியது.

வழக்கமான நாள் 24 மணி நேரம், அதாவது 86,400 வினாடிகள் நீடிக்கும். ஆனால் 2016ஆம் ஆண்டிலிருந்து பூமி சுற்றும் வேகம் அதிகரித்துள்ளதாக லோமோனோசோவ் மொஸ்கோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் விஞ்ஞானி லியோனிட் ஸோட்டோவ் சி.பி.எஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். அதற்குப் பூமியின் அலைகள் காரணமாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். ஒரு சில நாட்கள் மட்டுமே குறுகியதாக இருக்கும் என்று கூறிய அவர், அந்தப் போக்குத் தொடர்ந்தால் பூமியில் நேரம் கணக்கிடப்படும் விதம் மாற்றப்பட வேண்டியிருக்கலாம் என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.